விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு

website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 06 திங்கட்கிழமை (22.11.2021) தொலைபேசி 222 3173, 222 7329 ஒலி 335

## வடமராட்சியில் கோர விபத்து



### இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மந்திகை சாரையடிப் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற கோர விபத்தில் மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக்கழக இளம் வீரர் ▷15

## அரசுக்கு எதிராக நுவரெலியாவில் ஆர்ப்பாட்டம்

(நுவரெலியா)

இரசாயன உரம், கிருமி நாசினி போன்றவற்றை பெற்று தரக்கோரி நுவரெலியா மாவட்ட விவசாயிகள் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நுவரெலியா நகரில் மேற்கொண்டனர்.

இந்தப் பேரணிக்கு நுவரெலியா பொலி ▷15



## கிளிநொச்சியில் மோ.சைக்கிளில் சென்றவர் திடீரென விழுந்து மரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ9 வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்றவர் திடீரென வீழ்ந்து மரணமடைந்துள்ளார்.

குறித்த சம்பவம் கிளிநொச்சி பழைய ▷15

## வட்டுக்கோட்டையில் மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு நால்வருக்கு தடை

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாள் நினைவேந்தலை நடத்துவதற்கு மல்லாகம் நீதிமன்றினால் வட்டுக்கோட்டையில் நால்வருக்கு தடை உத்தரவு விதிக்கப்பட் ▷15

# அரசியல் கைதிகள் விரைவில் விடுதலை

### "ஒரே நாடு ஒரே சட்டம்" ஜனாதிபதி செயலணியின் தலைவர் ஞானசார தேரர் வவுனியாவில் தெரிவிப்பு



*(வவுனியா)*

தமிழ் அரசியல் கைதிகள் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளதாக "ஒரே நாடு ஒரே சட்டம்" ஜனாதிபதி செயலணியின் தலைவர் ஞானசார தேரர் தன்னிடம் தெரிவித்ததாக முன்னாள் அரசியல் கைதி செல்வநாயகம் அரவிந்தன் தெரிவித்துள்ளார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

## நாட்டில் மேலும் 19 பேர் பலி



(கொழும்பு)

நாட்டில் மேலும் கொரோனாத் தொற்றுக்குள்ளான 19 பேர் உயிரி ▷15

## விளக்கேற்றக் கேட்கும் அரசியல்வாதிகள் போதையை தடுக்கத் தயாரில்லை

### யாழில் ஞானசாரதேரர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விளக்கேற்றுவதற்காக கேட்கும் தமிழ் அரசியல்வாதிகள் போதைப்பொருளைத் தடுப்பதற்கு தயாராக இல்லை என கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

யாழில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ▷15

## உழவு இயந்திரத்தில் சிக்கிய 5 வயது சிறுவன் உயிரிழப்பு

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா - ஓமந்தை, பாலமோட்டைப் பகுதியில் உழவு இயந்திரத்தில் சிக்குண்டு 5 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

அதே பகுதியைச் சேர்ந்த உயிரிழந்த ▷15



## "கொல்பவன் வெல்வான்"

## புலிகளின் குண்டு வேலணையில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வேலணை - அம்பிகா நகர் ▷15



## கொரோனாவால் யாழில் பிரபல வர்த்தகர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்மாவிப ▷15

### மாவீரர் நாளுக்கு தடைகோரி விண்ணப்பம்

## பருத்தித்துறை, மல்லாகம் நீதிமன்றங்களில் இன்று பரிசீலனை

(குப்பிழான்)

யாழ்ப்பாணத்தில் மாவீரர் நாள் நிகழ்வுக்குத் தடை விதிக்கக்கோரி பருத்தித்துறை, மல்லாகம் நீதவான் நீதிமன்றங்களில் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மீதான பரிசீலனை இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. ▷15

## தமிழர் தாயகத்தில் பொலிஸ், இராணுவம் கடும் கண்காணிப்பு

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் இராணுவம் மற்றும் பொலிஸாரின் கண்காணிப்பு கடுமையாக்கப்பட்டுள்ளது.

மாவீரர் துயிலும் ▷15

## 6 நாட்கள் தொடர் காய்ச்சல் 6 வயது சிறுமி மரணம்

### செம்பியன்பற்றில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஆறு நாட்கள் தொடர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட ஆறு வயதுச் சிறுமி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

செம்பியன்பற்று மருதங்கேணியைச் சேர்ந்த பாஸ்கரலிங்கம் - சிலோயனா ▷15

## விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

(அராலி)

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காரைநகர் களபூமியில் விப ▷15

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# அதிகாரப்பத்திரத்தை இரத்துச் செய்தல்

குமாரு ஆறுமுகம் ஆகிய நான் 05.06.2012 அன்று திகதியிட்டு குமாரசாமி தவராஜசிங்கம் என்பவருக்கு கனகபுரம் கிளிநொச்சியில் உள்ள எனது காணி உறுதி இலக்கம் J/G/KOC/2904க்கு வழங்கப்பட்ட அதிகாரப்பத்திரத்தை (Power of Attorney) 05.11.2021முதல் இரத்துச் செய்து வெற்றும் வெறிதுமாக்கி விடுகிறேன்.

எனவே எனது விடயங்கள் எதிலும் இவர் எதிர்காலத்தில் எனது சார்பில் செயற்பட முடியாதென்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

(8726) குமாரு ஆறுமுகம்

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **இராசம்மா பொன்னுத்துரை**



அன்னை மடியில் 1930.02.15 ஆண்டவன் அடியில் 2018.11.25

ஆண்டு மூன்று வந்ததம்மா!
அநுதினமும் உனை எண்ணி
அழுகின்றோம் அம்மாவே!
ஆலமரமெனவே அழகு நிழல் பரப்பி
நற்கோலமுற வாழ்ந்த எம் தெய்வமே!
ஆயுள் உள்ளவரை உனை
நாம் மறவோமே!
எமை ஆசீர்வதியுங்கள் தாயே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.50, சபாபதி லேன்,
தலையாழி, யாழ்ப்பாணம். (C-3068)

உங்கள் நினைவில் வாழும் குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் கௌரீஸ்வரன்

(ஓய்வுபெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர், உரிமையாளர் - கௌரீஸ் ஸ்ரோர்)

யாழ்ப்பாணம் உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கௌரீஸ்வரன் அவர்கள் நேற்று (21.11.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - தங்கச்சிஅம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வனும் கௌசிகன், கௌரிகாந், காலஞ்சென்ற கிரிகாந் மற்றும் தனசிகன், ஜனதர்சினி, ஐங்கரமதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கஸ்தூரி, தாட்சாயினி, சந்துரு ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆதித்தின் அன்பு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.11.2021) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊளிப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible]
[illegible] (C [illegible])

தகவல்: குடும்பத்தினர்
076 939 6951, 076 561 5444

# மரண அறிவித்தல்

## தம்பையா பாலசிங்கம்



தோற்றம் 14.03.1937 மறைவு 21.11.2021

காரைநகர் ஆலின் விதியைப் பிறப்பிடமாகவும் கோவளத்தினை வதிவிடமாகவும் தற்போது இல.37/4, சிவகுருநாதர் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா பாலசிங்கம் அவர்கள் நேற்று (21.11.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், சௌம்பு ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரவீந்திரன் (அதிபர் - VCM கல்வி நிறுவனம்), ராஜினி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தம்பிராசா (சந்திரா ரேடர்ஸ், வெள்ளவத்தை), நவசோதி ஆகியோரின் மாமனாரும் கஜந்தினி, ஷர்விகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.11.2021) திங்கட்கிழமை மதியம் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.37/4, சிவகுருநாதர் லேன்,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (8730)

தகவல்: குடும்பத்தினர்

## வடக்கு மாகாணத்தின் இந்து பௌத்த கலாசார பேரவையினால் இதுவரை நடாத்தப்பட்டு வந்த 2ஆம் மொழிகளான சிங்களம் மற்றும் ஆங்கில மொழிக்கற்கைநெறி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது

இந்து பௌத்த கலாசார பேரவையினால் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக வடக்கு மாகாணத்தில் நடாத்தப்பட்டு வருகின்ற இரண்டாம் மொழிக்கற்கை நெறிகளான (சிங்களம் மற்றும் ஆங்கில மொழி) வகுப்புக்கள் தொடர்ந்தும் முன்பு நடந்த அரச பாடசாலைகளில் வழமை போன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

அரச பாடசாலைகளில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆறு மாத காலம் (120 மணித்தியாலங்கள்) இலவசமாக கற்பிக்கப்படும்.

இக் கற்கைநெறி முடியும்போது அரச அங்கீகாரத்துடன் பரீட்சைகள் நடைபெற்று சான்றிதழ்கள் வழங்கப்படும். இதில் கலந்துகொள்ள விரும்புவோர் வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் இருந்து விண்ணப்பிக்க முடியும்.

இக்கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் டிசம்பர் மாதம் முதல் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கீழ்க்காணும் பாடசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் இவ் வகுப்புக்கள் 2022 தை மாதம் முதல் ஆரம்பிக்கப்படும்.

| மாவட்டம் | பாடசாலை பெயர் |
|---|---|
| யாழ்ப்பாணம் | யா/கொக்குவில் இந்துக் கல்லூரி |
| | யா/மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி |
| | யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி |
| | யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி |
| | யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் |
| | யா/சுழிபுரம் விக்டோரியா கல்லூரி |
| | யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் |
| | யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி |
| | யா/சாவகச்சேரி றிபேஜ் கல்லூரி |
| | யா/உடுத்துறை மகா வித்தியாலயம் |
| முல்லைத்தீவு | மு/வித்தியானந்த கல்லூரி |
| | கலைமகள் வேலவர் அறநெறி பாடசாலை |
| | மு/விசுவமடு மகா வித்தியாலயம் |
| கிளிநொச்சி | கிளி/கார்மேல் பாத்திமா கல்லூரி |
| | கிளி/முருகானந்த கல்லூரி |
| | கிளி/பூநகரி மத்திய கல்லூரி |
| | கிளி/விநாசியோடை மகா வித்தியாலயம் |
| வவுனியா | வ/தாண்டிக்குளம் பிரமந்து மகா வித்தியாலயம் |
| | Cambridge Degree College |
| மன்னார் | வழமையாக நடைபெறும் பாடசாலைகளில் கற்கைநெறி நடைபெறும். |

மேலதிக தகவல்களுக்கு வடக்கு மாகாண இணைப்பாளருடன் தொடர்புகளை மேற்கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கம் : **076 028 2693, 021 223 2072**

**பொதுச் செயலாளர்**
**இந்து பௌத்த கலாசார பேரவை,**
**தலைமைக் காரியாலயம்,**
**இல.09, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(8700)

Scanned with CamScanner

# புதிய டெல்டா திரிபு

## மாணவர்களிடையே பரவும் அபாயம்

### இராஜாங்க அமைச்சர் தகவல்

(கொழும்பு)

**பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் புதிய டெல்டா உப வைரஸ் திரிபு பரவும் அபாயம் அதிகமாக காணப்படுவதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.**

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, புதிய டெல்டா திரிபின் உப பரம்பரை பாடசாலை மாணவர்கள் மத்தியில் பரவும் அபாயம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றாளர்களுக்கு ஏற்படும் கொவிட் தொற்றுக்குப் பின்னரான நோய் நிலைமையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



இதன்மூலம் கால்விரல்களில் இரத்தக் கட்டிகள் உருவாகின்றமை தெரிய வந்துள்ளது.

மேற்கத்தேய நாடுகளிலும் இவ்வாறான நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், இலங்கையிலும் சுமார் 10 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக விசேட மருத்துவர் வருண குணதிலக தெரிவித்தார். (நி-5)

# வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்களிப்பு இன்று

(கொழும்பு)

2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்களிப்பு இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான கூட்டணி அரசாங்கத்தின் 2022ஆம் நிதியாண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இம்மாதம் 12ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அதனைத்தொடர்ந்து இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று 22ஆம் திகதி மாலை வரை விவாதம் இடம்பெற்றது.

இந்த விவாதம் ... முறை உள்ளடங்கலாக டிசம்பர் 10ஆம் திகதி வரை 19 நாட்கள் விவாதம் இடம்பெறவுள்ளது.

அதனைத்தொடர்ந்து வரவு - செலவுத் திட்ட மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் 10ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# கட்டுப்பாட்டை இழந்த ஹன்ரர் ஆட்டோ- காருடன் மோதல்

## காயமடைந்த இருவர் மருத்துவமனையில்

(முறிகண்டி)



கிளிநொச்சி டிப்போ சந்தியில் இடம்பெற்ற பாரிய விபத்துச் சம்பவத்தில் இருவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றது. பரந்தனிலிருந்து கிளிநொச்சி நகருக்குச் சென்ற ஹன்ரர் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி மற்றும் காருடன் மோதியது.

குறித்த விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-100-316)

# சகல தரங்களுக்குமான கற்றல் செயற்பாடுகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் 6, 7, 8 மற்றும் 9 ஆம் தரங்கள் இன்று திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பம் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் டலஸ் அலகப்பெரும தெரிவித்தார்.

அத்துடன் தற்போது தரம் ஒன்று முதல் 5 வரையிலான தரங்களும் 10 முதல் உயர்தர வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா பரவல் காரணமாக பாடசாலைகள் தொடர்ச்சியாக மூடப்பட்டிருந்தன.

இந்தநிலையில், கொரோனாவின் தாக்கம் சற்று குறைந்ததையடுத்து, கட்டம் கட்டமாக பாடசாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு மட்டக்களப்பிலும் தடை உத்தரவு

(மட்டக்களப்பு)

மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த மட்டக்களப்பில் ஏழு பேருக்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொக்கட்டிச்சோலை பொலிஸாரால் மட்டக்களப்பு நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இரா.சாணக்கியன், கோ. கருணாகரம், முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஷ், முன்னாள் போராளிகள் ந. சுரேஸ், த.கஜேந்திரன், பட்டிப்பளை பிரதேச சபை தவிசாளர் சீ.புஷ்பலிங்கம் ஆகியோருக்கே இவ்வாறு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக குறித்த நபர்கள் 20ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதிவரை நினைவேந்தல் நிகழ் வுகளில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# மத்திய வங்கிக்கு புதிய உதவி ஆளுநர்கள்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியானது நான்கு புதிய உதவி ஆளுநர்களை நியமித்துள்ளது.

2021 நவம்பர் 17ஆம் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில் கே. ஜி. பி. சிறிகுமார, டி. குமாரதுங்க, திருமதி. யு. எல். முதுகல மற்றும் சி. பி. எஸ். பண்டார ஆகியோர் நவம்பர் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் உதவி ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (நி-5)

# 80வீதமாக குறைந்த காய்கறிகளின் வரவு

(கொழும்பு)

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு கிடைக்கும் காய்கறிகளின் அளவு குறைந்துள்ளதாக அதன் முகாமைத்துவம் தெரிவித்தது.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு நேற்று முன்தினம் நான்கரை இலட்சம் கிலோ கிராம் காய்கறிகள் மாத்திரமே கிடைத்துள்ளன.

இது சாதாரணமாக சந்தைக்கு கிடைக்கும் தொகையை விட 80 வீதம் குறைவான காய்கறி என தெரிவிக்கப்பட்டுள்ளது. வழமையாக தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு தினமும் 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட கிலோகிராம் காய்கறிகள் கிடைப்பதுண்டு.

பசளை பிரச்சினை மற்றும் கனமழையுடன் கூடிய காலநிலை காரணமாக காய்கறி விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக எதிர்வரும் நாட்களில் காய்கறிகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படலாம் எனக் கூறப்படுகிறது. (நி-5)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆங்கில பாட ஆசிரியர்
திரு. ச.யேசுதாசன் அவர்களின்
அன்புச் சகோதரன்



அமரர் **சற்குணம் ஞானசீலன்**

அவர்கள் கடந்த 20.11.2021 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மண்ணில்: 06.06.1970
விண்ணில்: 20.11.2021

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யாழ்.கோண்டாவில் இந்துக் கல்லூரி.

(C-3067)

Scanned with CamScanner

# சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் டோனி தொடர்ந்து நீடிப்பார்

## சீனிவாசன் உறுதி





சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் வெற்றிக்கு நீடித்த நிலையான செயல்பாடு தான் காரணம் என அணியின் உரிமையாளர் சீனிவாசன் தெரிவித்தார்.

ஐ.பி.எல் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற சென்னை சூப்பர் கிங்ஸ் அணிவீரர்களுக்கு சென்னை கலைவாணர் அரங்கத்தில் முதலமைச்சர். மு.க.ஸ்டாலின் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது. விழாவில் அணியின் உரிமையாளர் சீனிவாசன் பேசியதாவது.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் வெற்றிக்கு நீடித்த நிலையான செயற்பாடு தான் காரணம். டோனி தலைமையிலான சென்னை அணி வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

தற்போதுள்ள எந்த வீரரையும் இழக்க சென்னை அணி விரும்பவில்லை. சென்னை அணியில் டோனி தொடர்ந்து நீடிப்பார் என அவர் தெரிவித்தார்.

விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசும் போது. டோனி சி.எஸ்.கே. அணியின் கப்டனாக நீடிக்க வேண்டும் என்றும், இன்னும் பல போட்டிகளுக்கு அணியை வழிநடத்த வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். (4-6)

# பெண்களுக்கான எல்லே போட்டி இறுதிக்குள் மருதங்கேணி அணி



யாழ்.மாவட்ட இளைஞர் பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான பெண்களுக்கான எல்லே போட்டியில் மருதங்கேணி பிரதேச செயலக இளைஞர் அணி இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது.

அண்மையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் மருதங்கேணி பிரதேச செயலக இளைஞர் அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக இளைஞர் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நல்லூர் பிரதேச செயலக இளைஞர் அணி வழங்கப்பட்ட 20 பந்துகளில் 2 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மருதங்கேணி பிரதேச செயலக இளைஞர் அணி 14 பந்துகளில் 3 ஓட்டங்களைப் பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது. (4-90)

# பிரீமியர் லீக் கால்பந்து; லிவர்பூல் அணி வெற்றி

பிரீமியர் லீக் கால்பந்து தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் லிவர்பூல்-அர்செனல் அணிகள் பலப்பரிட்சை நடத்தின. அர்செனல் அணிக்கு எதிரான இந்த போட்டியில் 4-0 எனும் கோல் கணக்கில் லிவர்பூல் அணி வெற்றி பெற்றது.

இதன்மூலம், தொடர்ந்து 6 ஆவது முறையாக அர்செனல் அணியை வீழ்த்தி சாதனை படைத்துள்ளது லிவர்பூல் அணி. லிவர்பூல் அணி 12 போட்டிகளில் விளையாடி 25 புள்ளிகளுடன் புள்ளிப்பட்டியலில் இரண்டாம் இடத்துக்கு முன்னேறியது செல்சியா அணி புள்ளிப்பட்டியலில் முதல் இடத்தில் தொடர்ந்து நீடிக்கிறது. இந்த போட்டியில் அடைந்த தோல்வியின் காரணமாக அர்செனல் அணி 5 ஆம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. (4-5)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2454


### ஜெகநாத்

மழை வந்தா STATUS வைக்கிறது இந்த காலம்




90's kids காலம்

### நந்தினி




### மதன்ராஜ்

அடுப்பில் ஒரு வடை சட்டியும் குக்கரும் பக்கத்து பக்கத்துல இருந்துச்சாம்
அப்போ வட சட்டிய பார்த்து குக்கர் சொல்லிச்ச
நீ இவ்ளோ கறுப்பா இருக்கிறியே..
செவப்பா இருந்தா
எம்பூட்டு அழகா இருப்பேனுசாம்!!
உடனே வடசட்டி
நான் கறுப்பா இருக்கறப்பவே இப்படி நீ விசில் அடிக்கிறே
செவப்பா இருந்திருந்தா?
எவ்ளோ சேட்டை பண்ணுவே

### ரேவ்கா



### ஆர்யன்

டேய் தம்பி Childrens day க்கு நீ வைச்சிருந்த உன்னோட சின்ன வயசு போட்டோ சூப்பர்டா



### சபானா

+2 ல பொண்ணுங்க பெயிலானா கல்யாணம் கட்டிக் குடுத்து புருஷனோட அனுப்புறாங்க இதே



பசங்க பெயிலானா சோத்த கட்டிக் குடுத்து வேலைக்கு அனுப்புறாங்க நாங்க என்னடா பாவம் பண்ணோம்?

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்கும் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இராசிபலன்

22.11.2021
கார்த்திகை 06, திங்கட்கிழமை
திரியோதசி முன்னிரவு 8.48 மணிவரை
மிருகசீரிடம் முற்பகல் 10.05 மணிவரை
சுபநேரம் 12.10-1.40 மணிவரை
இராகுகாலம் 7.40-9.10 மணிவரை
சந்திராஷ்டமம்: கேட்டை
வைரவன்

**மேஷம்** – குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், பகையொன்று நட்பாகலாம், வருமானம் திருப்தி தரும்.

**ரிஷபம்** – வியாபார விருத்தியுண்டு, தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மிதுனம்** – ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**கடகம்** – தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள், சயனச் சுகக் குறைவுகள் ஏற்படலாம், சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும்.

**சிம்மம்** – தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்.

**கன்னி** – புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள்.

**துலாம்** – ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், உறவினர் வழியில் மன நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், தொழில் ரீதியாக சிலர் உதவி கேட்டு வரலாம்.

**விருச்சிகம்** – வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**தனுசு** – நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்** – பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்** – பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** – புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், அடுத்தவரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

உன் திறமைகளை பிறர் புகழட்டும்

# முதலீட்டாளர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்த மத்திய வங்கி ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

இலங்கை மத்திய வங்கியின் ஏற்பாட்டில் சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்களுக்கு உள்ள பிரச்சினைகள் தொடர்பில் அறிந்து தீர்வு காணும் விசேட கலந்துரையாடல் மத்திய வங்கி ஆளுநரின் பங்கேற்புடன் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிராந்தியக் கிளையின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது.

வட பிராந்தியத்துடன் தொடர்புடைய பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் பிராந்தியத்தின் நிலையான வளர்ச்சியை அடைவதற்கான ஒருங்கிணைந்த பொறிமுறையை உருவாக்குதல் மற்றும் சிக்கல்களை கையாள்வதற்கான சாத்தியமான தீர்வுகள் மற்றும் உத்திகள் வழங்குவதை நோக்காக கொண்டு இந்த விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன் போது முதலீட்டாளர்களின் பிரச்சினைகளை நேரடியாக கேட்டறிந்து கொண்ட மத்திய வங்கி ஆளுநர் அதற்கான தீர்வுகளை வழங்குமாறு ஆளுநர், அரச அதிபர்கள் மற்றும் வங்கி அதிகாரிகளுடன் பேசி அதற்கு தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர்கள், வங்கிகளின் பிராந்திய பொது முகாமையாளர்கள், சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்கள் என பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-33)

# கனரக வாகனம்-வான் மோதி ஒருவர் பலி,நால்வர் காயம்

## கண்டி-திருமலை வீதியில் சம்பவம்



(திருமலை)

ஹதரஸ்கொட்டுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி திருகோணமலை பிரதான வீதியில் நேற்றுக்காலை இடம் பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து தம்பலகாமம் நோக்கி பயணித்த கனரக வாகனத்துடன் வானொன்று மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் வானின் சாரதிக்கு அருகாமையில் அமர்ந்து பயணித்த நபரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் தம்பலகாமம் சிராஜ் நகரை சேர்ந்த 56 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை ஆவார்.

அதேசமயம் வானில் பயணித்த நால்வர் படுகாயமடைந்த நிலையில் தம்புள்ள வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரனைகளை ஹதரஸ்கொட்டுவ பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5)

# திறைசேரிக்கு அறிவிக்காமல் செலவு அம்பலப்படுத்திய கோபா குழு

(கொழும்பு)

திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துக்கு அறிவிக்காமல் வெளிநாட்டு நிதியுதவிகள் செலவுசெய்யப்பட்டமை குறித்து அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் தெரியவந்தது.

2017, 2018, 2019 நிதி ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை குறித்து ஆராய்வதற்காக சுற்றாடல் துறை அமைச்சின் அதிகாரிகள் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுக்கு அழைக்கப்பட்டபோதே இது குறித்த தகவல்கள் வெளியாகின.

9.9 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மூன்று திட்டங்கள் மற்றும் 1.86 மில்லியன் யூரோ பெறுமதியான திட்டங்களே இவ்வாறு நேரடி நிதியுதவியின் கீழ் முன்னெடுக்கப்பட்டன.

இத்திட்டங்கள் குறித்து வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே எதிர்வரும் காலத்தில் இவ்வாறான நிதியுதவிகள் கிடைக்கும்போதும் அவற்றை செலவுசெய்யும்போதும் அது பற்றி திறைசேரிக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோபாகுழு, அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியது. (நி-5)

# தடுப்பூசி அட்டை கட்டாயம்; பாராளுமன்ற அனுமதிக்காக காத்திருப்பு

(கொழும்பு)

பொது இடங்களுக்குச் செல்லும் போது தடுப்பூசி அட்டைகளை கட்டாயமாக்குவதற்கு பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சட்ட ஆவணங்கள் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

பொது இடங்களுக்குச் செல்லும் போது தடுப்பூசி அட்டைகளை கட்டாயமாக்கும் யோசனைக்கு சட்டமா அதிபர் திணைக்களம் அண்மையில் அனுமதி வழங்கியது.

இது தொடர்பான சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்த அமைச்சர் ரம்புக்வெல்ல,

வரவு-செலவுத் திட்ட விவாதங்கள் பாராளுமன்றத்தில் இடம்பெற்று வருவதால் அதற்கான நடவடிக்கைகள் தாமதமாகியுள்ளதாக தெரிவித்தார். (நி-5)

Scanned with CamScanner

# ஆயர் மன்றத்தின் அறிவிப்பில்
# எந்தவித அரசியல் பரிமாணமும் இல்லை
## நீதிக்கும் அமைதிக்குமான குருக்கள் துறவிகள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

**நவம்பர் மாதம் இறந்த அனைவருக்காகவும் இறை வேண்டல் செய்யும் மாதமாக காலங்காலமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இதற்கு அப்பால் எந்தவித அரசியல் பரிமாணமும் இல்லை என நீதிக்கும் அமைதிக்குமான குருக்கள் துறவிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.**

போரில் இறந்தவர்களை நினைவு கூர வடக்கு கிழக்கு ஆயர் மன்றம் அழைப்பு விடுத்த நிலையில் தமிழர் தரப்பில் அது பல எதிர்ப்பலைகளை உருவாக்கியது. அதற்கு பதிலளிக்கும் முகமாக கடந்த 19 ஆம் திகதி வடக்கு- கிழக்கு நீதிக்கும் அமைதிக்குமான குருக்கள் துறவிகள் அமைப்பு ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நவம்பர் மாதம் இறந்த அனைவருக்காகவும் இறை வேண்டல் செய்யும் மாதமாக உலகெங்கும் வாழும் கிறிஸ்தவ மக்களால் காலங்காலமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இக்காலத்தில் கல்லறைகளை தரிசிப்பதையும் இறந்தவர்களுக்கான வழிபாடுகளை மேற்கொள்வதையும் கிறிஸ்தவ மக்கள் தமது கடமையாகக் கருதி செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். இத்தகைய ஒரு நீண்ட மரபின் ஒரு பகுதியாகவே வடக்கு-கிழக்கு ஆயர் மன்றத்தின் மேற்படி வேண்டுகோளை பார்க்கின்றோம். அதற்கு அப்பால் இதற்கு எந்தவித அரசியல் பரிமாணமும் இல்லை.

மேற்படி அழைப்பில் நவம்பர் மாத மூன்றாவது சனிக்கிழமையில் போரில் இறந்த அனைவருக்காவும் செபிக்கும் படி அழைப்பு விடுக்கப்பட்டதே தவிர நவம்பர் இருபதாம் திகதி என்றல்ல. இவ்வருடம் அது 20ம் திகதி வருகிறது என்பதற்கப்பால் இந்த தினத்துக்கு வேறு முக்கியத்துவம் கிடையாது. உதாரணமாக அடுத்தடுத்த வருடங்களில் இது முறையே 19,18,17 என மாறி வரும்.

மே 18 ஐ இதே ஆயர் மன்றம் ஈழத்தமிழ் இனப்படுகொலை நாளென பிரகடனப்படுத்தி நினைவுகூர கடந்த மே மாதத்தில் அழைப்பு விட்டிருந்ததையும் இங்கு நினைவூட்ட விரும்புகிறோம். ஆகவே போரில் இறந்த அனைவருக்காகவும் இறைவேண்டல் செய்வதென்பது தமிழர் நெஞ்சங்களில் வாழும் மாவீரர்களையும், இன அழிப்புக்குள்ளான தமிழ் மக்களின் தியாகங்களையும் சமரசம் செய்வதாகாது. ஏற்கனவே தமிழ் மக்கள் நினைவு கூருகின்ற நாட்களில் அவர்களை நினைவுகூர்வது வரலாற்றுக் கட்டாயம் என்பதையும் வலியுறுத்துகின்றோம்.

தமிழ்த் தேசியப் பரப்பு மத வரையறைகளைக் கடந்து ஈழத்தமிழ் மக்களை ஈழத் தமிழ்த் தன்மையில் ஒருங்கிணைக்கின்றது. இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எமது தமிழ்த் தேசிய ஒற்றுமையை குலைக்க முயலும் ஆபத்துப் பற்றியும் நாம் அனைவரும் விழிப்பாயிருக்க வேண்டும். தமிழ் மக்கள் மத்தியிலே அண்மையில் அதிகரித்துவரும் மத முரண்பாடுகள் குறித்து விரைந்து செயற்பட்டு நல்லிணக்கத்தையும் ஒத்துழைப்பையும் தொடர்ந்து பேண நாம் முன்வர வேண்டும். எதிர் காலத்தில் இத்தகைய தவறான புரிதல்களை தவிர்க்கும் முகமாக வடக்கு-கிழக்கு ஆயர் மன்றம் .தமிழ்த் தேசியம் சார் விடயங்களில் வடக்கு கிழக்கில் உள்ள ஏனைய சமயத் தலைவர்களோடும், சிவில் சமூக அமைப்புக்களோடும் நெருக்கமான ஒத்துழைப்பை தொடர்ந்து பேணும் என எதிர்பார்க்கின்றோம்.

ஈழத்தமிழர்களின் கூட்டு நினைவுகூர்தல் என்பது தமிழ்த் தேசக்கட்டுமானத்தின் பிரிக்க முடியாத அங்கமாக உள்ளது என்பதை நினைவூட்டி, ஈழத்தமிழர்களின் விடுதலைக்கான எமது தொடர் அர்ப்பணத்தையும் அனைத்துத் தரப்புக்கும் மீண்டுமொரு முறை உறுதி செய்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (4-5)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு புங்குடுதீவு அருள் மிகு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோயிலின் பிரதம குருக்கள் ச.முத்துக்குமாரக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன. இந் நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறும். (4-5)

## சைக்கிள் திருடியவர் விளக்கமறியலில்

(கரணவாய்)

பருத்தித்துறை மாலுசந்திப் பகுதியில் துவிச்சக்கரவண்டி திருட்டில் ஈடுபட்டவர் நெல்லியடிப் பொலிஸாரினால் கையும் மெய்யுமாக பிடிபட்டார்.

நாகர் கோவிலைச் சேர்ந்த 55 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட வரை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்திய போது எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பதில் நீதிபதி உத்தரவிட்டார். (4-5-60)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 420 | 320 | 340 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 200 |
| தக்காளி | 450 | 350 | 360 | 480 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 50 |
| கோவா | 200 | 260 | 260 | 280 |
| கரட் | 280 | 350 | 380 | 400 |
| பூசணி | 60 | 70 | 50 | 60 |
| புடலங்காய் | 260 | 240 | 180 | 200 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 200 | 180 | 240 |
| பெரிய வெங்காயம் | 200 | 160 | 150 | 150 |
| பாகற்காய் | 550 | 550 | 500 | 600 |
| வெண்டிக்காய் | 240 | 220 | 180 | 240 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 160 |
| பயிற்றங்காய் | 500 | 600 | 400 | 400 |
| லீக்ஸ் | 250 | 340 | 380 | 360 |
| [illegible] | 120 | 80 | 80 | 120 |
| கறிமிளகாய் | 600 | 380 | 450 | 480 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 350 | 300 | 350 | 400 |
| [illegible] | 400 | 280 | – | 300 |
| [illegible] | 100 | 100 | 80 | 100 |
| [illegible] | 400 | 400 | 360 | 400 |
| [illegible] | 80 | 80 | 70 | 70-100 |
| [illegible] | 250 | 240 | 250 | 250 |
| [illegible] | – | 500 | – | 400 |
| [illegible] | 140 | 160 | 120 | 200 |
| [illegible] | 30 | 50 | 50 | 40 |
| [illegible] | 30 | 200 | 20 | 30 |
| [illegible] | – | 180 | 50 | 120 |

## சொக்கப்பனை முறிந்து வீழ்ந்ததில் இருவர் படுகாயம்

(குப்பிழான்)

சுதுமலை தெற்கு எச்சாட்டி குளவைரவர் ஆலயத்தில் திருக்கார்த்திகை விளக்கீட்டை முன்னிட்டுப் பாரியளவில் சொக்கப்பனை அமைக்கப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் குறித்த சொக்கப் பனையின் மூங்கிலொன்று திடீரென முறிவடைந்து விழுந்ததில் அதனை அமைத்துக் கொண்டிருந்த இரு இளைஞர்கள் படுகாயமடைந்தனர். மேலும் பலருக்குச் சிறுகாயங்கள் ஏற்பட்டது. குறித்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது.

இதனையடுத்துப் படுகாயமடைந்த இரு இளைஞர்களும் உடனடியாக மீட்கப்பட்டுத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். (4-5-18)

## வெள்ள அபாயம்
# பிரதேச சபைக்கு அறிவிக்காது ஜனாதிபதிக்கு அறிவித்த மக்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபையில் இருந்து 150மீற்றர் தொலைவில் உள்ள இராமாவில் கிராமத்தில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்ட போதிலும் அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் அவ்விடயம் தொடர்பாக பிரதேசசபைக்கு அறிவிக்காது ஜனாதிபதியின் பொதுமக்கள் சேவைப் பிரிவுக்கு அறிவித்துள்ளனர்.

குறித்த சேவைப் பிரிவினர் சபைக்கு இத்தகவலைத் தந்து பார்வையிட்டதுடன் பிரதேசசபைத் தவிசாளருக்கும் வெள்ள அனர்த்தம் தொடர்பில் அவர்கள் அறிவித்திருப்பதாக தெரிவித்தனர். இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேசசபை தவிசாளர் கருத்து தெரிவிக்கையில், திட்டமிடப்படாத அபிவிருத்தியால் தான் வெள்ள அனர்த்தம் ஏற்படுகிறது. இன்றும் அதே திட்டமிடப்படாத அபிவிருத்திகள் நடந்தேறிய வண்ணமே உள்ளன. சில அனர்த்தங்கள் தவிர்க்க முடியாதவை.

இருப்பினும் மக்கள் படும் சிரமங்களை பார்த்துக் கொண்டும் இருக்க முடியாது. பல இடங்களில் இருந்தும் எமக்கு வெள்ள அனர்த்தம் தொடர்பான தொலைபேசி அழைப்புக்கள் வந்தன. ஆனால் எமது சபையில் இருந்து வெறுமனே 150மீற்றர் தொலைவில் உள்ள இராமாவில் பகுதியில் தேங்கிய வெள்ளத்தை அகற்ற எமக்கு அறிவிக்காது ஜனாதிபதி சேவைப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மக்களின் சிரமங்களைப் போக்க நாம் தயாராக உள்ளோம். அதற்கு மக்களின் ஒத்துழைப்பும் அவசியம். அதுவே மனதிற்கு உத்வேகத்தை அளிக்கும். என மேலும் அவர் தெரிவித்தார். (4-5-30)

# விரைவில் விவசாயப் புரட்சி

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சூளுரை



**(கொழும்பு)**

**ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின்கீழ் விவசாயிகளின் அனைத்துத் தேவைகளும் பூர்த்திசெய்யப்படும் அதேவேளை, மொத்தத் தேசிய உற்பத்திக்கு விவசாயத்துறையின் ஊடாக வழங்கப்படும் பங்களிப்பை மேலும் அதிகரிக்கும் வகையிலான விவசாயப் புரட்சியொன்றையும் நிகழ்த்துவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சூளுரைத்துள்ளார்.**

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்ட சஜித் பிரேமதாஸ அங்கு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது.

துறைசார் நிபுணர்களின் கருத்துக்கள், பரிந்துரைகள் அனைத்தையும் புறக்கணித்து சேதன உரத்தை மாத்திரம் பயன்படுத்துவதற்கான தீர்மானத்தை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது.

தீங்கேற்படுத்தும் நுண்ணுயிரிகள் அடங்கிய உரம் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. அதனைத் திருப்பியனுப்பிய பின்னரும்கூட அந்த உரத்தை ஏற்றிய கப்பல் இலங்கையின் கடற்பரப்பைச்சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது.

அதுமாத்திரமன்றி விஞ்ஞானபூர்வ ஆய்வுகளின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படைகளுக்குப் புறம்பாக நனோ நைதரசன் திரவ உரத்தை இறக்குமதி செய்திருப்பதுடன் அதற்கு ஒப்பீட்டளவில் அதிக விலை செலுத்தப்பட்டிருக்கிறது.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தவறான தீர்மானங்களின் விளைவாகவே தற்போது விவசாயிகள் மிக மோசமான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

அறிவியல் ஆய்வுகளை மையப்படுத்தி விஞ்ஞான பூர்வமான தீர்மானங்களை மேற்கொள்வதற்குப் பதிலாக, மூட நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவையாகவே அரசாங்கத்தின் தீர்மானங்கள் அமைந்துள்ளன.

கொவிட் - 19 வைரஸ் பரவல் நெருக்கடியைக் கையாளும் விடயத்தில் ஏனைய நாடுகள் தடுப்பூசியைக் கொள்வனவு செய்வதில் நாட்டம் காண்பித்த வேளையில் எமது அரசாங்கம் மாத்திரம் பாணி மருந்தை நம்பிக்கொண்டிருந்தது.

நாடு மிகமோசமான நெருக்கடியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது. மக்களால் தாங்கிக்கொள்ள முடியாதளவிற்கு வாழ்க்கைச் செலவு அதிகரித்திருக்கின்றது. ஒரு வேளை உணவருந்தியதன் பின்னர் மறுவேளை உணவை எங்கிருந்து. எவ்வாறு பெற்றுக் கொள்வது என்று சிந்திக்க வேண்டிய நிலையில் மக்கள் இருக்கின்றார்கள்.

அதுமாத்திரமன்றி சீனி, பால்மா, சமையல் எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு நீண்ட வரிசைகளில் காத்திருக்கிறார்கள். இவ்வாறு வரிசைகளில் காத்திருக்கும் யுகத்தைத் தோற்றுவிப்பதற்கா சுமார் 69 இலட்சம் மக்கள் இந்த அரசாங்கத்திற்கு வாக்களித்தார்கள்?

விவசாயிகளின் பெரும் ஆதரவினால் ஆட்சி பீடமேறிய அரசாங்கம் தற்போது அவர்களது தேவைகளை முழுமையாகப் புறக்கணித்து நெருக்கடிக்குள் தள்ளியிருக்கின்றது. அதுமாத்திரமன்றி விவசாயிகளின் நிலங்களைத் தரிசு நிலங்களாக்கி, அவற்றை குறைந்த விலைகளுக்கு விற்பனை செய்வதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என சஜித் தெரிவித்தார். (நி-5)

## பொருட்களின் விலை உயர்வுக்கு இரு வாரங்களுக்குள் தீர்வு-லசந்த

(கொழும்பு)

பல்வேறு காரணிகளினால் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் இரு வார காலத்திற்குள் அப்பிரச்சினைக்கு சிறந்த தீர்வு முன் வைக்கப்படும் என அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

நுகர்வோரை நெருக்கடிக்குள்ளாக்கும் செயற்பாடுகளுக்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது.

அத்துடன் அத்தியாவசியப் பொருட்களின் விலையை வர்த்தமானி அறிவித்தல் ஊடாக கட்டுப்படுத்த முடியாது என அவர் தெரிவித்தார். (நி-5)

## வேலைவாய்ப்புக்காக செல்வோருக்கு காப்புறுதி கட்டாயம்

### தொழில்துறை அமைச்சர் தகவல்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காகச் செல்லும் இலங்கையர்களுக்கு காப்புறுதி வழங்கும் புதிய நடைமுறை கொண்டுவரப்படவுள்ளது.

அடுத்த வருடம் ஜனவரி மாதத்தின் பின்னர் வெளிநாட்டுக்குச் செல்லும் இலங்கை பணியாளர்களுக்கு 15 ஆயிரம் அமெரிக்க டொலர் காப்புறுதி வழங்கும் நடைமுறையை கட்டாயமாக்கும் சட்டம் கொண்டுவரப்படும் என தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார். (நி-5)

## சிறைக்கைதிகள் இடையே கொவிட் கொத்தணி

(கொழும்பு)

பதுளை சிறைச்சாலையில் 12 கைதிகளுக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் 05 கைதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட துரித அன்டிஜன் பரிசோதனையில் இவ்வாறு தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது. (நி-5)




Scanned with CamScanner

பாரதம் / வெளிநாடு

# ஐரோப்பாவில் மீண்டும் அதிகரிக்கும் கொரோனா

# அதிருப்தியில் உலக சுகாதார அமைப்பு

World Health Organization

(ஜெனிவா)

**ஐரோப்பாவில் கொவிட் பரவல் மீண்டும் அதிகரித்துள்ளது. உடனடியாக நடவடிக்கைகளை எடுக்காது போனால், எதிர் வரும் மார்ச் மாதமளவில் மேலும் 5 இலட்சம் கொவிட் மரணங்கள் ஏற்படக் கூடும் என உலக சுகாதார அமைப்பின் ஐரோப்பிய பிராந்திய பணிப்பாளர் கலாநிதி ஹான்ஸ் க்ளுக் எச்சரித்துள்ளார்.**

முகக்கவசங்களை அணிய வேண்டும் என்ற சட்டத்தை கடுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

குளிருடன் கூடிய கால நிலை, மந்தகதியிலான தடுப்பூசி செலுத்தல், டெல்டா திரிபின் பரவல் என்பன ஐரோப்பாவில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க காரணமாக அமைந்துள்ளது.

கொவிட் பரவல் அதிகரித்துள்ளமை காரணமாக ஐரோப்பிய நாடான ஒஸ்ரியா, 20 நாட்களுக்கு நாடடை முற்றாக முடக்க தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# 20 சதவீத சிறுவர்கள் குழந்தை தொழிலாளர்களாக மாற்றம்

## ஆப்கானில் அவலம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நிலவும் வறுமை காரணமாக 20 சதவீத சிறுவர்கள் குழந்தை தொழிலாளர்களாக மாறியுள்ளனர்.

20 ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற போரால் ஏராளமான குடும்பங்கள் உடமைகளை இழந்து இடம் பெயர்ந்துள்ளன.

பெற்றோர் பலர் வேலை இழந்ததால், குடும்பத்தின் வறுமையை போக்க சிறுவர்கள் திண்பண்டங்கள் விற்றும், கார்களைத் துடைத்தும், ஷூ பாலிஷ் செய்தும், குப்பை கூளங்களில் இருந்து மறு சுழற்சிக்குத் தேவைப்படும் பொருட்களை சேகரித்தும் வருவாய் ஈட்டி வருகின்றனர்.

இதேவேளை, ஆப்கானிஸ்தானில் ஒவ்வொரு 5 மணி நேரத்துக்கும் ஒரு குழந்தை ஊட்டச்சத்து குறைபாட்டால் உயிரிழப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. (நி-5)

# நான்கு காதுகளுடன் பூனைக்குட்டி



(துருக்கி)

துருக்கியில் 4 காதுகளுடன் பிறந்த பூனைக்குட்டி அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

மிடாஸ் எனப் பெயரிடப்பட்டுள்ள அந்த பூனைக் குட்டி, மரபணு குறைபாடு காரணமாக 4 காதுகள் மற்றும் குறைபாடுள்ள தாடையுடன் பிறந்துள்ளது.

மரபணு குறைபாடு காரணமாக பூனைக் குட்டிக்கு உடல் ரீதியாக எந்த பாதிப்பும் இல்லை எனவும் சாதாரண பூனைகளைப் போலவே நன்றாக காது கேட்கும் எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ள நிலையில், மிடாஸ் பூனைக் குட்டி இணையத்தில் பிரபலமடைந்து வருகின்றது. (நி-5)

# இராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் சூடானில் 40 பேர் உயிரிழப்பு

## அமெரிக்கா கண்டனம்



ஆட்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து சூடானின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வரும்.

அதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதற்கமைய சூடானில் இராணுவ ஆட்சிக்கு எதிராக நடந்த போராட்டத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 40 ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது சூடான் இராணுவம் நடத்திய [illegible] கண்டனம் தெரிவித்துள் [illegible]

(சூடான்) [illegible]

(நி-5)

# கொவிட் கட்டுப்பாடுகளை எதிர்த்து நெதர்லாந்தில் போராட்டம்



(நெதர்லாந்து)

ஐரோப்பாவில் அதிகரித்து வரும் கொவிட்-19 தொற்று நோய் நெருக்கடிக்கு மத்தியில் கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டு வரும் நிலையில் அவற்றை எதிர்த்துப் போராட்டங்களும் வலுவடைந்துள்ளன.

அரசின் புதிய சமூக முடக்க நிலை அறிவிப்புக்கு எதிராக நெதர்லாந்தில் பெரும் போராட்டம் வெடித்துள்ளது.

ஹேகில் நேற்று முன்தினம் நடந்த போராட்டங்கள் பெரும் வன்முறையாகமாறின. போராட்டக்காரர்கள் பொலிஸார் மீது கற்களை வீசியும் பட்டாசுகளைக் கொழுத்தி எறிந்தும் தாக்குதல் நடத்தினர். சில இடங்களில் வாகனங்களுக்கும் தீவைக்கப்பட்டன. இதனையடுத்து பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தி ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டினர்.

இதேவேளை, கொவிட் கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆஸ்திரியா, குரோஷியா மற்றும் இத்தாலி ஆகிய ஐரோப்பிய நாடுகளிலும் எதிர்ப்புப் போராட்டங்கள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Scanned with CamScanner

## காட்டுயானைகளை கட்டுப்படுத்த யானை வேலிகளை அமைக்கவும்

### பிரதேச மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாங்குளம் கிழவன் குளம் ஆகிய பிரதேசங்களில் காட்டுயானைகளை கட்டுப்படுத்தும் வகையில் யானை வேலிகளை அமைத்து தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர்பிரிவிற்கு உட்பட்ட பனிக்கன்குளம், மாங்குளம், கற்குவாரி கிழவன் குளம் ஆகிய பகுதிகளில் தினமும் காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்துக்காணப்படுகிறது.

குறிப்பாக, யானைகளின் தொல்லை காரணமாகவே பனிக்கன்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வீட்டுத்திட்டத்தில் மக்கள் முழுமையாக குடியேறி வாழ முடியாதுள்ளது என்றும் வீட்டின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் பனிக்கன்குளத்தின் கீழ் உள்ள வயல் நிலங்கள் மற்றும் கிழவன்குளம் ஆகிய பகுதிகளில் பயிர்செய்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாக பிரதேச விவசாயிகள் தெரிவித்தனர். (4-5-315)

## 998 கிலோ டைனமேற் வெடிபொருட்கள் மன்னாரில் மீட்பு: இருவர் கைது



(மன்னார்)

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 998 கிலோ எடையுள்ள டைனமேற் வெடிபொருட்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை மன்னார் சாந்திபுரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து பொலிஸார் மீட்டுள்ளதோடு சந்தேக நபர்கள் இருவரை கைது செய்துள்ளனர்.

கடற்படையினரின் இரகசிய தகவலைத் தொடர்ந்து மன்னார் பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் குறித்த டைனமேற் வெடி பொருட்களை கைப்பற்றினர்.

குறித்த வெடிபொருள் மீன்பிடிக்க பாவிக்கப்படும் வெடிபொருள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-285)

## முல்லைத்தீவு தேராவில் பகுதியில் தொழில் அற்ற நிலையில் பல குடும்பங்கள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு தேராவில் பகுதியில் வாழும் எண்பது வீதமான குடும்பங்கள் தொழில் வாய்ப்பின்றி வாழ்வதனால் அன்றாடம் துன்பங்களை அனுபவித்து வருவதாகவும் தமக்கான வாழ்வாதார உதவிகளை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர்பிரிவின் கீழ் உள்ள தேராவில் கிராமத்தில் கடந்தகால யுத்த சூழ்நிலைகளால் பல்வேறு பகுதிகளிலும் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டு குடியேற்றம் செய்யப்பட்டனர்.

இவ்வாறு குடியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் கடந்த 2008ஆம் ஆண்டுக்கு முன்னர் இக்கிராமத்தை அண்டிய பகுதிகளில் தொழில் வாய்ப்புக்களை வழங்கக்கூடிய தொழில் நிறுவனங்கள், விவசாயப் பண்ணைகள் காணப்பட்டன.

இவற்றின் மூலம் தொழில் வாய்ப்புக்களைப் பெற்று தமது குடும்பங்களை கொண்டு நடத்தினர்.

யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வையடுத்து இங்குள்ள கூடுதலான குடும்பங்கள் யுத்தத்தில் தமது உழைப்பாளர்களை இழந்த பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தொழில் வாய்ப்புக்கள் இன்றி பெரும் சிரங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

போரில் அதிகம் பாதிக்கப்பட்ட இந்தப்பகுதி மக்களுக்கு இதுவரை முழுமையான எந்த வாழ்வாதார உதவிகளும் கிடைக்கவில்லை. இதனால் இங்குள்ள பலர் அன்றாட உணவிற்கே பெரும் துன்பங்களை எதிர்கொள்கின்றனர்.

இதேவேளை குடும்பவறுமை காரணமாக பலர் தமது கல்வியைக்கூடத் தொடரமுடியாத நிலையில் அதிகமான சிறார்கள் உள்ளனர். இதனைக்கருத்தில் கொண்டு தொழில் வாய்ப்புக்களை பெற்றுத்தரவோ அல்லது இக்கிராமத்தினை அண்டிய பகுதிகளில் தொழில் வழங்கும் இடங்களையோ ஏற்படுத்தித்தரவேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-315)

## பயன்படுத்த முடியாத நிலையில் பொது மலசலகூடம்

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட நாச்சிக்குடா சந்தியில் பொது மக்கள் பாவனைக்காக அமைக்கப்பட்டுள்ள பொது மலசலகூட தொகுதிக்கு தண்ணீர் வசதியின்மையால் அதனை பயன்படுத்த முடியாத நிலை காணப்படுவதாக பொது மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

கிளிநொச்சி பூநகரி ஏ-32 வீதியின் நாச்சிக்குடா சந்தியில் பல்வேறு தேவைகளுக்கும் கூடும் மக்களின் தேவைகருதி நாச்சிக்குடா சந்தியல் அமைக்கப்பட்டுள்ள பொதுமலசல கூடத்தினை இதுவரை பொது மக்கள் பாவனைக்கு உரிய முறையில் கையளிக்கப்படவில்லை என வர்த்தகர்கள், பொதுமக்கள் குற்றம் சாட்டினர்.

மேற்படி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மலசலகூடத்தின் கட்டுமானப்பணிகள் நிறைவு பெற்று 04 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் . அதற்கான தண்ணீர் வசதி இதுவரை ஏற்படுத்தப்படவில்லை எனபல்வேறு தரப்பினரும் குற்றம் சாட்டியுள்ளனர். (4-5-315)

## மன்னாரில் நாளுக்கு நாள் அதிகரிக்கும் தொற்று!

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நிலையில் கடந்த 20 நாட்களில் 423 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் நேற்று தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மேலும் புதிதாக 18 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

நவம்பர் மாதம் முதலாம் ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை 423 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த வருடம் 2799 தொற்றாளர்களும்,மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 2816 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் தற்போது வரை 25 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளது என மேலும் தெரிவித்தார். (4-5-285)



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவுக்கு புலம்பெயர் வர்த்தகர் ஒருவரின் நிதிப்பங்களிப்பில் அலங்கார மீன்களுடன் கூடிய மீன்தொட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை அன்பளிப்பாக வழங்கிவைக்கப்பட்டது. (படம் : ரவிசாந்)



[illegible]

## கெரோயினுடன் இளைஞன் கைது

(நெளுக்குளம்)

வவுனியா ஓமந்தை சோதனைச் சாவடியில் 5 கிராம் கெரோயின் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை ஓமந்தை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர் (4-5-299)

## போக்குவரத்து நெருக்கடியில் அமதிபுரம் கிராமம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு அமதிபுரம் கிராம மக்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர். துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் எல்லைப் பிரிவில் இக்கிராமம் காணப்படுகிறது.

125 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் துணுக்காய் பிரதேச செயலகத்திற்குச் செல்வதற்கு பேருந்து சேவைகள் கடந்த பத்தாண்டுகளாக நடைபெறவில்லை. மக்கள் சுய முயற்சியினால் போக்குவரத்தினை மேற்கொள்ள வேண்டி உள்ளது.

அக்கராயனில் இருந்து துணுக்காய் வரை பேருந்து சேவை நடத்துங்கள் என இக்கிராம மக்கள் கடந்த பத்தாண்டுகளாக விடுத்துவரும் கோரிக்கை தற்போது வரை நிறைவேற்றப்படாமலே உள்ளது. (4-5-350)

Scanned with CamScanner

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 17.11.2021- 15.12.2021



**வளர்ச்சியை குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் மேஷ இராசி வாசகர்களே!**

கார்த்திகை மாதக் கிரக நிலை களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் செவ்வாய், உங்கள் இராசியில் உள்ள சந்திரனை பார்ப்பதால் 'சந்திர மங்கள யோகம்' உருவாகின்றது. குரு பகவான் இப்பொழுது இலாப ஸ்தானத் திற்கு வந்துவிட்டார். எனவே பொருளா தாரப் பற்றாக்குறை அகலும்.

சனியின் பார்வை, செவ்வாய் மீதும், செவ்வாயின் பார்வை சனியின் மீதும் பதிகின்றது. உங்களைப் பொறுத்த வரை இந்த பார்வை நன்மையே செய் யும். செவ்வாயோடு சகாய ஸ்தானா திபதி புதனும் இருப்பதால் தொழில் உத்தியோகத்தில் நல்ல மாற்றங்கள் ஏற்படும். வழக்குகள் சாதகமாக மாறும்.

**விருச்சிக புதனின் சஞ்சாரம்**

கார்த்திகை முதல்நாளே விருச்சிக இராசிக்குப் புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் அஷ்ட மத்தில் அடியெடுத்து வைப்பது யோகம் தான். மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக்கசப்புகள் மாறும். உத்தி யோகத்தில் உள்ளவர்களுக்கு பணி நிரந்தரம் பற்றிய தகவல் வரலாம். தொழில் செய்பவர்கள் தொழிலை விரிவு செய்ய எடுத்த முயற்சிக்கு உதவிகள் கிடைக்கும். ஆரோக்கியப் பாதிப்புகள் அடிக்கடி தலைதூக்கும்.

**தனுசு புதனின் சஞ்சாரம்**

நிலை மாறி வெற்றிநடைபோடும். தந்தை வழியில் இருந்த விரிசல் மாறும். கல்யாணம், காது குத்து, மணி விழா போன்ற சுபநிகழ்வுகள் நடைபெறுவ தற்கான அறிகுறிகள் தென்படும்.

**மகர சுக்கிரனின் சஞ்சாரம்**

கார்த்திகை 19 ஆம் திகதி மகர இராசிக்குச் சுக்கிரன் செல்கின்றார்.




உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங் களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக் கும் பொழுது குடும்பத்தில் ஒருவருக்கு

ளைகள் நிகழ்த்தும் நேரம் இது.

**விருச்சிக செவ்வாயின் சஞ்சாரம்**

கார்த்திகை 20 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிநாதன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் மிகுந்த கவனத்தோடு செயற்பட வேண்டும். மனக்குழப்பங்கள் அதிகமாக ஏற்படும். உத்தியோகத்தில் கடுமையாகப் பணி புரிந்தும் மேலிடத்து ஆதரவு கிடைக் காது. ஆரோக்கியத் தொல்லை அதிகரி க்கும். வெற்றிகள் வந்து சேர குரு பகவானை வழிபடவும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் தனவரவு தாராளமாக வந்து சேரும். இல்லத்தில் நல்ல சம்பவ ங்கள் நடைபெறும். கணவன்-மனை விக்குள் பாசமும் பற்றும் அதிகரிக்கும். குருவின் பார்வை பலத்தால் கல்யாண

## உத்தியோகத்தில் நல்ல மாற்றங்கள் ஏற்படும்

**செவ்வாய்-சனி பார்வைக் காலம்**

மாதத் தொடக்கத்தில் இருந்து கார்த் திகை 20 ஆம் திகதி வரை செவ்வாய்-சனியின் பார்வை இருக்கின்றது.

கார்த்திகை 18 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் செல்கின்றார். அங்கு ள்ள சுக்கிரனோடு சேர்ந்து 'புத-சுக்கிர யோகத்தை உருவாக்குகின்றார். எனவே பொருளாதாரத்தில் மிகுந்த முன்னேற் றம் ஏற்படும். செய் தொழிலில் இருந்த மந்த

மேற்பட்டவர்கள் சம்பாதிக்கும் யோகம் உண்டு. எனவே இந்த நேரத்தில் வீடு வாங்கலாமா? இடம் வாங்கலாமா? தொழிலை சொந்த இடத்திற்கு மாற்ற லாமா? என்றெல்லாம் சிந்திப்பீர்கள். பிற இனத்தாரின் கூட்டு முயற்சியோடு சாத

முயற்சிகள் கைகூடும். கார்த்திகை 20 ஆம் திகதிக்கு மேல் கவனம் தேவை. உடல் நலனில் அக்கறை செலுத்துவது நல்லது. பணிபுரியும் இடத்தில் எதிர் பார்த்த சலுகைகள் கிடைக்கும். நிதிப் பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். பிள் ளைகளின் முன்னேற்றம் திருப்தி தரும்.

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**



**நாகரிகமான முறையில் பேசி எல்லோரையும் கவர்ந்திழுக்கும் ரிஷப இராசி வாசகர்களே!**

கார்த்திகை மாதக் கிரக நிலை களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் சுக்கிரன் அஷ்டமத்தில் சஞ்சரி க்கின்றார்.

6 இற்கு அதிபதியாகவும் விளங்கும் சுக்கிரன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் பொழுது, விபரீத இராஜயோக அடிப்

செவ்வாய்-சனியின் பார்வை இருக்கின் றது. மகரத்திலுள்ள சனி துலாத்தில் உள்ள செவ்வாயைப் பார்க்கின்றார். செவ்வாய் மகரத்திலுள்ள சனியைப் பார்க்கின்றார். யோககாரகன் சனியை விரயாதிபதி செவ்வாய் பார்ப்பதால் சுப விரயங்கள் அதிகரிக்கும். செவ்வா யோடு புதனும் இருப்பதால் உடன் பிறப்புகளின் இல்லங்களில் நடை பெறும் மங்கல நிகழ்ச்சிகளை முன் னின்று நடத்து வதுடன், பொருளுதவி யும் செய்வீர்கள்.

**விருச்சிக புதனின் சஞ்சாரம்**

கார்த்திகை முதல் நாளே விருச்சிக இராசிக்கு புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் சப்தம ஸ்தானத்தில் வரும்பொழுது குடும்ப முன்னேற்றம் திருப்திகரமாக இருக் கும்.

பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ள வர்களுக்கு சம்பள உயர்வுடன் கூடிய

யோகத்தை உருவா க்குகின்றார். இதன் விளைவாக ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. வெளிநாட்டிலிருந்து எதிர்பார் த்த நல்ல தகவல் வரலாம். வீடு மாற்ற ங்கள் அல்லது வீடு வாங்கும் முயற்சி பற்றிச் சிந்திப்பீர்கள்.

வைத்திருக்கும் பழைய வாகன த்தைக் கொடுத்து விட்டுப் புதிய வாகனம் வாங்கும் எண்ணம் உருவாகும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப் பவர்களுக்கு அதிகாரப் பதவிகள் வந்து சேரலாம்.




**மகர சுக்கிரனின் சஞ்சாரம்**

கார்த்திகை 19 ஆம் திகதி மகர

கிடைக்கும்.

**விருச்சிக செவ்வாயின் சஞ்சாரம்**

கார்த்திகை 20 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங் களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் 7 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் சகோதர ஒற்றுமை பலப் படும்.

எதிர்பார்த்த உதவிகள் எளிதில் கிடைக்கும். இடம், பூமி சேர்க்கையும் ஏற்படும். உற்சாகத்துடன் செயற்படும் விதத்தில் உடல்நலனும் இடம் கொடுக் கும். துர்க்கையை வழிபடுவதன் மூலம் துயரங்களிலிருந்து விடுபடலாம்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் செல்வ நிலை திருப்தி தரும். திடீர் இடமாற்றங்களால் நன்மை ஏற்படும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அருகில் இருப்பவர்களின் ஆதரவு உண்டு. கணவன்-மனைவிக் குள் பிணக்குகள் அகன்று இணக்கம்

## பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்

படையின் நல்ல செய்தியுடன் பலரும் இல்லம் தேடி வரலாம்.

**செவ்வாய் சனி பார்வைக் காலம்**

மாதத் தொடக்கத்தில் இருந்து கார்த்திகை 20 ஆம் திகதி வரை

புதிய வேலைவாய்ப்பு கிடைக்கலாம். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

**தனுசு புதனின் சஞ்சாரம்**

கார்த்திகை 18 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் செல்கின்றார். அங்கு ள்ள சுக்கிரனோடு சேர்ந்து புத-சுக்கிர

இராசிக்குச் சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிநாதன் சுக்கிரன் 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக் கும் நேரமாகும். பயணங்கள் அதிகரி க்கும். நண்பர்கள் உங்கள் பணிக்கு உறுதுணை புரிவர். உடல்நலம் சீரா கும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வு

ஏற்படும்.

பிள்ளைகளை உங்கள் மேற்பார் வையில் வைத்துக் கொள்வது நல்லது. உங்கள் பெயரில் சொத்துக்கள் வாங் கும் யோகம் உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு ஊதிய உயர்வுடன் கூடிய இடமாற்றம் கிடைக்கும்.

(தொடரும்)

Scanned with CamScanner

# வரவு - செலவுத் திட்டம் தேர்தலை இலக்காக கொண்டதல்ல

## அமைச்சர் பந்துல



(கொழும்பு)

குறுகிய கால நலனையும், அடுத்த வருடம் இடம்பெறவுள்ள மாகாண சபைத் தேர்தலையும் இலக்காகக் கொண்டு 2022ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டம் முன்வைக்கப்படவில்லை. நிலையான அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டன.

வரவு-செலவு திட்டம் இம்முறை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாழ்க்கை செலவு அதிகரிக்கப்பட்டுள்ளமை, நடப்பு அரசியல் நிலவரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரவு - செலவு திட்டத்தின் ஊடாக அத்தியாவசிய பொருட்களின் விலை குறைவடையும் என மக்கள் எதிர்பார்ப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அத்தியாவசிய பொருட்களின் விலை நாளாந்தம் அதிகரிக்கப்பட்ட வண்ணம் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறோம் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலையை தேசிய மட்டத்தில் தீர்மானிக்க முடியாது.

கடந்த இரண்டு வருட காலமாக முழு உலகமும் எதிர்கொண்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையையும், அதனால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்பையும் எதிர்க்கட்சியினர் நன்கு அறிவார்கள். ஆனால் குறுகிய அரசியல் நோக்கத்திற்காக மக்கள் மத்தியில் பொய்யுரைத்துக் கொள்கிறார்கள்.

மக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல. தற்போது ஒரு சில கடினமாக தீர்மானங்களை முன்னெடுக்காவிடின் எதிர்வரும் நாட்களில் பாரதூரமான பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும் எனத் தெரிவித்தார். (நி-5)

# நீர்க் கட்டணம் அதிகரிப்பு?

(கொழும்பு)

நீர்க் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இன்னும் இறுதித் தீர் மானம் எடுக்கப்படவில்லை என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

எவ்வாறிருப்பினும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின்செலவினம், வருமானத்தை விட அதிகரித்துள்ளமையினால் கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருகிறது.

அத்துடன், பொருளாதார நெருக்கடியைக் கட்டுப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லாவிட்டால், நீர்க் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவர் நிஷாந்த ரணதுங்க நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார். (நி-5)

# நோய் அறிகுறிகள் தென்பட்டால் பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம்

## சுகாதார அமைச்சு அறிவுறுத்து

(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தலால் மூடப்பட்டிருந்த பாடசாலைகள் கட்டம் கட்டமாக மீண்டும் திறக்கப்பட்டு வரும் நிலையில் நோய் அறிகுறிகள் காணப்படும் மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிவுறுத்தலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் [illegible] பெற்றோர்களிடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, மாணவர் ஒருவருக்கு கொவிட்-19 தொற்று உறுதியானதாக சந்தேகித்தாலோ அல்லது தொற்று உறுதியானாலோ பாடசாலைகளில் பின்பற்ற வேண்டிய முறைமைகள் அடங்கிய சுகாதார வழிகாட்டல் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன், பாடசாலைகளின் நுழைவாயிலில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் உடல் நலம் குறித்துக் கண்காணிப்பது அத்தியாவசியமாகும்.

மாணவர் ஒருவருக்கு தொற்று உறுதியானால் உடனடியாக பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கும் அறிவிக்க வேண்டும்.

அத்துடன், அந்தப் பகுதிக்குப் பொறுப்பான சுகாதார தரப்பினருக்கும் அறியப்படுத்துமாறும் குறித்த சுகாதார வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5)

# 500 மில்லியன் டொலர்; இந்தியாவிடமிருந்து பெறத் தீர்மானம்

(கொழும்பு)

[illegible]

எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு மாதாந்தம் 350 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகின்றன. அதற்கான பணத்தை தேடுவதே உண்மையான பிரச்சினையாக மாறியுள்ளது [illegible] கடந்த தினம் தெரிவித்திருந்தார்.

இந் நிலைமையைக் கருத்தில் கொண்டு எரிபொருள் இறக்குமதிக்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக இந்தியாவிடமிருந்து பெற அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக [illegible] (நி-5)

# இன்று ஒரு தகவல்

## பயனுள்ள பாதை

உங்கள் வாழ்க்கையின் இலட்சியம் என்ன? இந்தக் கேள்வியை யாரிடம் வேண்டுமானாலும் கேட்டுப்பாருங்கள். பெரும்பான்மையானவர்கள் திருதிருவென்று விழிப்பார்கள்.

மனிதனைத் தவிர மற்ற உயிரினங்களின் இலட்சியம் என்ன? நிச்சயமாக இனப்பெருக்கத்தைத் தவிர வேறு அல்ல.

மனிதனின் இலட்சியமும் இதுவாக இருக்கலாமா? கூடவே கூடாது.

நம் ஆறாவது அறிவுக்கு வேலை கொடுத்து நமது இலட்சியங்களை வகுத்துக் கொள்ள வேண்டும். ஏதோ பிறந்து விட்டோம் எப்படியாவது வாழ்ந்துவிடுவோம் என்ற எண்ணத்தை உடைத் தெறிய வேண்டும்.

இலட்சியங்கள் சாதாரணமானவையாகவும் இருக்கலாம். உதாரணமாக, ஒரு டிகிரியாவது வாங்கி விட வேண்டும் . மகளுக்கு திருமணம் முடிக்க வேண்டும்.

மகனை மேலை நாடுகளுக்கு அனுப்பி படிக்க வைக்க வேண்டும்.சொந்தமாக வீடு கட்ட வேண்டும். பணக்காரனாகி விட வேண்டும் என்பன போன்றவை சுயநல இலட்சியங்கள்.

இலட்சியங்கள் வாழ்க்கைக்குத் தேவை தான். ஆனால் அவற்றை அடைவதே நமது இலட்சியமாகி விடக்கூடாது.

இலட்சோபலட்சம் மக்களுக்கு பயன்படக் கூடிய காரியம் ஒன்று என்னால் ஆக வேண்டும். என் இரத்தம் என் தாய் நாட்டின் முன்னேற்றத்திற்காகச் சிந்தப்பட வேண்டும். மற்றவர்களுக்கு எந்நாளும் எந்த வகையிலாவது உதவிக்கொண்டே இருக்க வேண்டும்.

மற்றவர்கள் மகிழ்ச்சியில் தான் என் மன நிறைவு. மற்றவர்கள் மதிக்கும் வகையில் புகழுடைய வேண்டும் என்பன போன்ற பொது நல இலட்சியங்களை மனதில் நிறுத்த வேண்டும்.

இலட்சியம் இல்லாத வாழ்க்கை திக்கு தெரியாத பாதையில் இல்லாத ஓர் ஊரை நோக்கி முட்டிக்கானால் நடப்பது போன்றதாகும். கும்மிருட்டில் கண்ணையும் இறுகக் கட்டிக் கொண்டு நடக்க முயலும் செயலை விட மேலான முட்டாள் தனமாகும்.

எண்ணிய இலட்சியங்களை அடைந்து விட்டால் நம்முடைய அதிக பட்ச திறமையை மனதில் கொண்டு புதிய இலட்சியங்களை மேற்கொள்ள வேண்டும். இத்தகைய முயற்சி வாழ்க்கையின் பிடிப்பை ஏற்படுத்தும்.

இன்றே-இப்பொழுதே நம் இலட்சியங்களை வகுத்துக் கொள்வோம். அடைவதற்கான திட்டங்களை உடனே தீட்டுவோம். அவற்றை நோக்கி வீரநடை போடுவோம். இது தான் நாம் செல்லும் பயனுள்ள பாதையாக இருக்கும்.

லேனா தமிழ்வாணன்

Scanned with CamScanner




## அதிசய பூசணிக்காய்

ஒரு ஊரில் பெரிய பண்ணையார் ஒருவர் இருந்தார். அந்த ஊரில் இருந்த பெரும்பாலான நிலங்கள் அவருக்குத் தான் சொந்தம்.

அவர் கொடூர மனம் படைத்தவர், யாருக்கும் உதவி செய்யமாட்டார், பணம், பணம் என்று பேராசையில் வாழ்பவர்.

அவரிடம் நல்லதம்பி என்ற உழவர் வேலை பார்த்து வந்தார். அவருக்குக் குடிசை ஒன்றும் சிறிதளவு நிலமும் இருந்தன.

பண்ணையாரிடம் வந்த அவர், ஐயா! எல்லா நிலத்திலும் உழுது விதை நட்டு விட்டார்கள். என் நிலம் மட்டும் தான் வெறுமனே உள்ளது. நீங்கள் சிறிது தானியம் தாருங்கள். என் நிலத்திலும் விதைத்து விடுகிறேன், அது வளர்ந்து அறுவடை செய்ததும், உங்களுக்குரிய பணத்தை கொடுத்து விடுகிறேன், மீதி என் பிள்ளைகள் படிப்பிற்கு உதவியாக இருக்கும் " என்றார்.



"என் நிலத்திலேயே உழுது பயிரிடு. சொந்தமாகப் பயிரிட வேண்டாம். பண்ணையாராகும் ஆசையை விட்டு விடு.

கூலியாளாகவே இரு. உன் பிள்ளைகள் ஒன்றும் படிக்க வேண் டாம் அவர்களும் இங்கேயே வேலைக்கு வரச் சொல் அரை வயிற்றுக் கஞ்சி யாவது கிடைக்கும்" என்று கோபத்துடன் சொன்னார் அவர். சோகத்துடன் வீடு திரும்பினார் அவர்.

தன் மனைவியிடம், நாம் வளம் பெறுவது பண்ணையாருக்குப் பிடிக்கவில்லை. தானியம் தர மறுத்து விட்டார். நீயும் நம் குழந்தைகளும் எப்போதும் போலப் பட்டினி கிடக்க வேண்டியதுதான், நம் பிள்ளைகள்கூட படிக்க முடியாது போலிருக்குது. இது தான் நம் தலைவிதி" என்று வருத்தத்துடன் கூறினார்.

அவர்கள் குடிசையில் குருவி ஒன்று ஏற்கனவே கூடுகட்டி இருந்தது. அந்த குருவிக்கு தினமும் கொஞ்சம் தானியங்கள் உழவரின் மனைவியும், குழந்தைகளும் கொடுப்பார்கள்.

சின்னஞ்சிறு குடிசையில் குருவிக்கும் தங்க இடம் கொடுத்து மகிழ்ந்தார்கள், கூட்டில் அந்தக் குருவி நான்கு முட்டைகள் இட்டது. நான்கும் குஞ்சுகளாயின.

அந்த குஞ்சுகளின் சப்தம் இனிமையாக இருந்தது, தினமும் குருவியானது வெளியே சென்று பூச்சிகளை பிடித்து கொண்டு வந்து குஞ்சுகளுக்கு கொடுக்கும், ஒருநாள் சரியான புயல், மழை பெய்தது. வெளியே சென்ற குருவி வீட்டிற்கு வரவே இல்லை. (தொடரும்)

# மகாபாரதம்

251



வாய்மையைப் போற்றுபவன் இன்ப துன்பங்களைச் சமமாகக் கருதுவான். விரதம், தவம், தியானம் இவற்றால் மனம், சொல், செயல் ஆகியவை தூய்மை அடையும்.

தவத்திற்கு இணையானது வாய்மை. கண்ணுக்கு இணையானது கல்வி. தனித்து இருத்தல், இன்பதுன்பங்களைச் சமமாக பாவித்தல், ஒழுக்கம், பணிவுடைமை, கொல்லாமை ஆகியவற்றையே ஒவ்வொருவரும் செல்வமாகக் கருத வேண்டும். பிற செல்வங்கள் செல்வமே அல்ல.

ஞானம் தான் கண்!
சத்தியம் தான் மேலான தவம்!
ஆசைதான் மிகப் பெரிய துன்பம்!
தியாகம் தான் அழிவில்லாத இன்பம்!
மேலும், தாய், தந்தை, தாரம், மக்கள், உறவினர், நண்பர் யாராலும் ஒரு பயனும் இல்லை.

தருமம் ஒன்றே துணையாகும். ஆகவே மனக் குகையில் அடைபட்டிருக்கும் ஆன்மாவைக் கண்டு ஆராதனை செய்ய வேண்டும்" என்று தந்தைக்கு உபதேசம் செய்தான் மேதாவி என்னும் மகன்.

பீஷ்மர் தருமரை நோக்கி, "மைந்தனின் பேச்சைக் கேட்ட தந்தை வாய்மையைப் போற்றி மேன்மை அடைந்தான். நீயும் வாய்மையைப் போற்றி உயர்வாயாக" என்றார்.

### பொருள் ஆசை துக்ககரமானது

பொருள்களின் மீது தோன்றும் வைராக்கியமே உண்மையான இன்பத்திற்குக் காரணம் என்பதை விளக்கும் கதை.

பீஷ்மர் தருமரிடம், "தருமா வாய்மை, வைராக்கியம், இன்ப துன்பங்களைச் சமமாகக் கருதுதல், பற்றில்லாமல் செயலில் ஈடுபடுதல், வீணாகக் கஷ்டப் படாமலிருத்தல் ஆகிய ஐந்துமே அமைதிக்குக் காரணமாகும்.

துறவிகள் இந்த ஐந்தையுமே உத்தம இன்பமாகவும், உத்தம தருமமாகவும் கருதுவர். இது தொடர்பாக மங்கி என்பவரின் கதையைச் சொல்கிறேன்" என்ற படி தொடர்ந்தார்.

எத்தனையோ தொழில்களைச் செய்தும் பொருள் சேர்க்க இயலாமையால் மங்கி என்பவர் சோர்ந்து போனார். அவரிடம் சிறிதளவு பணம் இருந்தது. இது தான் இறுதி என, அப்பணத்தைக் கொண்டு இரு கன்றுக்குட்டிகளை வாங்கினார்.

அவற்றை உழவுத் தொழிலுக்கு பழக்குவதற்காக ஒரு நுகத்தடியில் பூட்டி ஓட்டிக் கொண்டு போனார். பயிற்சி இல்லாக் காரணத்தால் கன்றுக்குட்டிகள் மிரண்டு ஓடின.

அப்படி ஓடும் போது ஒட்டகம் ஒன்று வழியில் படுத்திருந்தது. ஒட்டகம் மத்தியில் இருக்க, இரு புறமும் இரு கன்றுக்குட்டிகள் ஓட ஒட்டகத்தின் தலைமீது நுகத்தடி உராய்ந்து சென்றது.

அது கண்டு ஆத்திரமடைந்த ஒட்டகம் திடீரென எழுந்தது. இரு கன்றுக் குட்டிகளையும் நுகத்தடியுடன் தூக்கிக் கொண்டு விரைந்து சென்றது.

கன்றுகள் உயிர் போவது போலத் துடித்தன. மங்கி மனம் தளர்ந்தது. மனிதனிடம் ஆற்றலிருந்தாலும், அதிர்ஷ்டம் இல்லையெனில் பொருள் சேர்க்க இயலாது. இறைவனின் அருள் இருந்தால்தான் முயற்சியும் கை கூடும். அலைகடலையும், பல மலைகளையும் கடந்து முயன்றாலும் முயற்சி இல்லையெனில் பொருள் இல்லை. (தொடரும்)

Scanned with CamScanner

நீதியே ஆட்சியின் உயிர்.
நடுநிலைமையே நீதியின் உயிர்.
- ஜஸ்டினியன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# படையினரை நினைவு கூரமுடியுமென்றால்...

மாவீரர் தினத்தை நினைவுகூருவதைத் தடுப்பதில் ஆட்சியாளர்களும் படைத் தரப்பும் கங்கணம் கட்டி நிற்கின்றன.

விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த போராளிகளை நினைவுகூர முடியாது.

அவர்கள் அரசாங்கத்துக்கு எதிராகப் போராடியவர்கள். படைத் தரப்புடன் போர் புரிந்தவர்கள் என்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவர்களை நினைவேந்துவது தடுக்கப்படுகிறது.

இஃது ஆளும் சிங்களத் தரப்பின் நினைப்பாக இருக்க, மாவீரர்கள் தொடர்பில் தமிழ் மக்களின் நிலைப்பாடு என்னவென்று அறிவதும் ஆராய்வதும் கட்டாயமானதாகிறது.

அந்தவகையில், மாவீரர் என்போர் தமிழ் மக்களின் வழிபாட்டுக்குரிய வீரமறவர்கள். அவர்கள் தமிழ் இனம் வாழ்வதற்காகத் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்தவர்கள். எங்கள் பிள்ளைகள். அவர்களின் போராட்டத்தில் நியாயம் இருக்கிறது.

பேரினவாதிகள் ஆட்சி அதிகாரத்தில் இருந்து கொண்டு, தமிழர்கள் சிறுபான்மை இனம் என்பதற்காக, அவர்கள் மீது அடாவடித்தனம் புரிவதை - இனக்கலவரத்தை ஏற்படுத்தி தமிழ் மக்களைக் கொன்றொழிப்பதை கைகட்டி வாய்பொத்தி நின்று பார்க்க வேண்டுமா?

அல்லது குறித்த மிலேச்சத்தனத்தை எதிர்த்துப் போராட வேண்டுமா? என்ற கேள்வி எழும்போது,

அரசாங்கம் என்பது தன் நாட்டு மக்கள் அனைவரையும் சமமாக மதித்து அரசாட்சி செய்ய வேண்டும். இனம், மதம், மொழி என்ற பாகுபாடுகள் இல்லாமல் அனைவரும் இந்த நாட்டு மக்கள்.

எனவே அவர்கள் அனைவரும் சட்டத்தின் முன் சமமானவர்கள். அனைவருக்கும் அனைத்து உரிமைகளும் உண்டு என்ற ஞானநாயகப் பண்போடு ஆட்சி செய்ய வேண்டும்.

தவிர, படைத்தரப்பு என்பது நாட்டு மக்களைக் காப்பாற்றுவதற்காக மக்களின் வரிப் பணத்தில் ஊதியம் பெற்று களப் பணியைச் செய்கிறது.

ஆனால் இலங்கையில் படைத்தரப்பினர் சிங்கள மக்களைப் பாதுகாக்கின்றவர்களாகவே இருக்கின்றனர்.

அதாவது தாங்கள் தமிழ் மக்களின் எதிரிகள் போல படையினர் செயற்படுகின்றனர்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில், போரில் உயிர்நீத்த படையினரை நினைவுகூருவது எந்தவகையில் நியாயம் என தமிழ் மக்கள் கேள்வி எழுப்ப முடியும்.

நிலைமை இதுவாக இருக்கையில், கள முனையில் உயிர்நீத்த படையினரை நினைவு கூருவதாக [illegible]

இதை நாம் கூறும்போது [illegible]

# பெண்ணைக் கட்டி வைத்துவிட்டு முல்லையில் பாரிய கொள்ளை

(குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பூதன்வயல் கிராமத்தில் வீட்டில் தனிமையில் இருந்த பெண்ணை கட்டிவைத்துவிட்டு வீட்டில் இருந்த பணம், நகை, தொலைபேசி என்பன கொள்ளையிடப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், பூதன்வயல் கிராமத்தில் வீட்டில் தனிமையில் வாழ்ந்துவந்த இளம் குடும்பப் பெண்ணின் வீட்டிற்குள் நுழைந்த மூன்று கொள்ளையர்கள் தங்களை அடையாளம் காணாதவாறு முகத்தினை மூடிய நிலையில் வீட்டில் இருந்த பெண்ணின் கை, கால்களை கட்டி வைத்துவிட்டு பெண்ணை சத்தமிட முடியாதவாறு வாய்க்குள் துணிகளை அடைந்து சித்திரவதை செய்து வீட்டில் இருந்து சுமார் 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

15 பவுண் நகை, 5 இலட்சம் ரூபாய் பணம் மற்றும் பெறுமதியான தொலைபேசி என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் (ம-3,250)

# வலி. கிழக்கு தவிசாளருக்கு நீதிமன்றில் முன்னிலையாக கட்டளை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷை இன்று திங்கட்கிழமை காலை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மல்லாகம் மாவட்ட நீதிமன்றின் கட்டளை அச்சுவேலி பொலிஸாரினால் சேர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் தினம் தொடர்பில் நீதிமன்றங்களினால் தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு வரும் நிலையில் மாவீரர் தினம் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டே இவ் அழைப்புக் கட்டளை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவீரர் தினம் மற்றும் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல்களில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளரின் நினைவேந்தல் சுதந்திரத்திற்கு எதிராக பொலிஸார் வழக்குகளைத் தாக்கல் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இம்முறை உப தவிசாளர் கபிலனின் பெயரும் இவ் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. (ம-3)

# மறவன்புலவு சச்சிதானந்தனுக்கு சாவகச்சேரி நீதிமன்றம் அழைப்பாணை

(குப்பிழான்)

இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தனுக்குச் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தால் அழைப்பாணை அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.

இதற்கமைய வழக்கு ஒன்றிற்காக அவரை இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் சாவகச்சேரி நீதிமன்றத்திற்குத் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி அழைப்பாணை அறிவித்தல் இரு நாட்களுக்கு முன் சாவகச்சேரிப் பொலிஸாரால் அவரிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த அழைப்பாணை அறிவித்தலில் வழக்கு இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் குற்றவியல் வழக்கா? குடியியல் வழக்கா? எந்தச் சட்டத்தை மீறியதான வழக்கு? முறைப்பாட்டாளர் யார்? போன்ற எந்தவித விபரங்களும் குறிப்பிடப்படவில்லை என இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் கடும் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

இப்படியொரு விசித்திரமான நீதிமன்ற அழைப்பாணை அறிவித்தலை தான் இதுவரை கண்டதில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-3,18)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

யாழ். பிரதேசத்தில் பெரியபொக்கணை, வாதரவத்தை ஆகிய இடங்களிலும்

வவுனியா பிரதேசத்தில் முகத்தான்குளம் முதலாவது பண்ணை, கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கினிக், மணிபுரம், சமயபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021

**"இந்த உலகத்தில் அழகானது எதுவுமே இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். எப்போதும் உங்களை ஆச்சரியப்படுத்தும் அளவுக்கு ஒரு மரத்தின் தோற்றத்தில், ஒரு இலையின் அசைவில் ஏதோவொன்று இருக்கும்"**

*- அல்பேட் சுவைற்சர் (பிரான்ஸ் தத்துவவியலாளர் - சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்)*

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## தவறைத் திருத்துவது எப்படி?



❖ உடல், உயிர், அறிவு - இம்மூன்றும் உங்களுக்கு சொந்தம் கிடையாது. நீங்கள் உண்மையில் வெறும் உடலும், உயிரும். அருவ தேடலால் கிடைக்கும் அறிவும்கூட இறைவனால் மட்டுமே உங்களுக்கு கிடைக்கிறது. மற்றபடி உங்களுக்கும், அதற்கும் சிறு சம்பந்தம் கூட கிடையாது. ஆகவே, நீங்கள் பெற்றிருக்கும் உடல்பலம் மற்றும் அறிவு பெருக்கை கர்வம் கொள்ளாதீர்கள். உங்களால் உண்டாவது எதுவும் இல்லை என்ற உண்மையை புரிந்துகொண்டு கர்வத்தை விட்டுவிடுங்கள்.

❖ நீங்கள் ஒரு உயர்ந்த கட்டடத்தில் நின்று கொண்டிருக்கிறீர்கள். அங்கிருந்து கீழே இறங்க வேண்டுமென நினைக்கிறீர்கள். அதற்காக உடனேயே, மேலிருந்து குதித்துவிட முடியாது. படிகளின் வழியாக இறங்கி வருவதுதான் சரியான வழியாக இருக்கும். இதைப்போலவே தவறு செய்துவிட்டு, திருந்த வேண்டுமென நினைப்பவர்கள் உடனேயே, உணர்ச்சி வசப்பட்டு "திருந்திவிட்டேன்" என்று சொன்னால் மட்டும் போதாது. அவ்வாறு சொல்பவர்களை, முழுமையாக திருந்திவிட்டதாக ஏற்கவும் முடியாது. மனதை படிப்படியாக ஒழுங்குபடுத்தி, இறைவனின் மீது செலுத்த முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் மனம் திருந்தும். தவறுகள் ஏற்படாது.

❖ நீங்கள் இறைவனிடம் பக்தி செலுத்தி, நன்னிலை பெறுவதற்காகவே இவ்வுலகில் படைக்கப்பட்டிருக்கிறீர்கள். இறைவனிடம் பக்தி செலுத்துபவர்கள் தான் மேன்மையான நிலையை அடைய முடியும். உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் உடல் வாகனம் போன்றது. அந்த வாகனத்தை பழுதுபடுத்திவிடாமல், செம்மையாக பராமரித்து, மனதையும், உடலையும் இறைவனிடம் செலுத்த வேண்டும். அப்போதுதான் நீங்கள் உங்களது கடமையை முழுமையாக நிறைவேற்றியவர் ஆவீர்கள்.

Scanned with CamScanner

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

20

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்




பெரும்பாலான எண்கள் "சேர்க்கை குறியீட்டுடன்" எழுதப்படுகின்றன. அதாவது விரும்பிய எண்ணிக்கையில் சேர்க்கப்பட்ட இலக்கங்களை கூடிய பெறுமானத்திலிருந்து குறைந்த பெறுமானம் வரை எழுதுவதன் மூலம் இலக்கங்கள் பெறப்படுகின்றன. எடுத்துக்காட்டாக "87" என்ற எண் 50 + 10 + 10 + 10 + 5 + 1 + 1 =" IXXXΛII " என்று எழுதப்படும்.

எத்துருசிய எழுத்துக்கள் வழக்கமாக வலமிருந்து இடமாக எழுதப்பட்டிருப்பதால், எண் '87' கல்வெட்டுகளில் "IIΛXXX↑ " என்று எழுதப்பட்டுள்ளன.

மேலும், சில எண்கள் தங்கள் மொழியில் பேசப்பட்ட விதத்தை பிரதிபலிக்கும் வகையில் எழுதப்படுகின்றன. உதாரணமாக எத்துருசிய எண்களில் 17, 18 மற்றும் 19 ஐ "IIIXX","IIXX" மற்றும் "IXX" என்று எழுதுவார்கள் - அதாவது பதினேழை "இருபது முதல் மூன்று" என்றும் பதினெட்டை "இருபது முதல் இரண்டு" மற்றும் பத்தொன்பதை "இருபது முதல் ஒன்று" என்றும் எழுதுவார்கள். இது ஓரளவு ரோமன் முறையை ஒத்தது. இதே முறையே 27, 28, 29, 37, 38, 39 போன்றவற்றுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

எட்ருஸ்கான்கள் பொதுவாக 4 ஐ "IIII" போன்று எழுதுவார்கள். அதே போன்றே 14, 24, 34, முதலியனவும் எழுதப்படுகின்றன. 40ஐ "XXXX" என்றும் மற்றும் "II", "III", "IIII" போன்றவை 7, 8 மற்றும் 9 ஐ குறிக்கப் பயன்படுகின்றது. எத்துருசிய எண குறியீடுகள் உரு 11 இல் காட்டப்பட்டுள்ளது.






**கரோஸ்தி எண்கள் (கி.மு. 3 ஆம் நூற்றாண்டு)**

கரோஸ்தி எழுத்துமுறை அல்லது காந்தாரி எழுத்து முறை என்பது [illegible] கி.பி 3 ஆம் நூற்றாண்டு வரைக்கும் [illegible]

[illegible]

எண்முறையை கொண்டுள்ளது. கரோஸ்தி எண்கள், எழுத்துக்களைப் போலவே, வலமிருந்து இடமாக எழுதப்பட்டுள்ளன. இவ் எண் முறைமையில் பூச்சியம் இல்லை. 5-9 இலக்கங்களுக்கு தனிக் குறியீடுகள் இல்லை. கரோஸ்தியில் உள்ள எண்கள் ஒரு சேர்க்கை முறையைப் பயன்படுத்துகின்றன.




உரு 12 ஐப் பார்க்க.


90 ஐ எழுதுவதற்கு வலமிருந்து இடமாக 20 இற்கான குறியீட்டை 4 முறை எழுதி அதன்பின் 10 இற்கான குறியீடு எழுதப்படும். 1996 ஐ எழுதுவதற்கு வலமிருந்து இடமாக 1000 இற்கான குறியீட்டை எழுதி அதனை தொடர்ந்து 9 இற்கான குறியீடும் நூறுக்கான குறியீடும் அதனை தொடர்ந்து 90 இற்கான குறியீடும் 6 இற்கான குறியீடும் இடப்படும்.

**ரூமி எண்முறைமை (Rumi Numeral System)**

ரூமி எண்முறைமை வட ஆபிரிக்காவில் 10 ஆம் நூற்றாண்டு முதல் 17 ஆம் நூற்றாண்டு வரை பயன்பாட்டில் இருந்தது. இது ஒரு சிறப்பு எண் முறைமையா[illegible] 12 ஆம் நூற்றாண்டில் [illegible]

இலக்கங்களின் வடிவங்கள் அரபு எண்களை அல்லது இந்து-அரபு எண்களிலிருந்து வேறுபட்டது. இந்த எண் முறை [illegible] உரு 13 இல் எண்களின் குறியீடுகள் தரப்பட்டுள்ளன. ஒன்றைக் குறிக்கும் குறியீட்டுக் கீழ் ஒரு கோடு கீறினால் அது அக்குறியீட்டின் 1,000 மடங்கைக் குறிக்கும்.

ஒன்றைக் குறிக்கும் குறியீட்டுக் கீழ் இரண்டு கோடுகள் கீறினால் அது அக் குறியீட்டின் 1,000,000 மடங்கைக் குறிக்கும். அதாவது கீறப்படும் ஒவ்வொரு கோடும் அதன் பெறுமானத்தை 1000 மடங்கால் அதிகரிக்கும் உதாரணமாக o =70 ஆகும். o என்பது 70000 ஆகும்.




**கிப்பு எண்முறைமை (Quipu numerals) (கி.பி 10 ஆம் நூற்றாண்டு)**

கிப்பு (quipu, khipu) என்பது, முறகாலத்தில் அண்டிய (near Andes Mountains) தென் அமெரிக்கப் பிரதேசத்தில், தகவல்களைப் பதிவு செய்து வைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட ஒரு கருவி ஆகும். இழைப் பேசும் முடிச்சு எனவும் அழைப்பது உண்டு. இது பருத்தி அல்லது ஒரு வகை ஒட்டக உரோமத்தை நூற்று உருவாக்கிய புரிகளால் ஆன பல நிற நூல்களைக் கொண்டது இது. இப்பிரதேசத்தில் வாழ்ந்த இன்கா மக்களுக்குத் தரவுகளைச் சேகரித்துப் பதிவு செய்து வைப்பதற்குப் பயன்பட்டது. வரி அறவீட்டுக் கணக்குகள், மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்கான பதிவுகள், காலக் கணிப்புத் தகவல்கள், படைத்துறை அமைப்பு போன்ற விடயங்கள் தொடர்பான தகவல்கள் இவ்வாறு பதியப்பட்டன.

இந்த நூல் அல்லது இழைகளில் ஒரு குறித்த முறையில் இடப்பட்ட முடிச்சுக்கள் எண்கள் அல்லது பிற வகை மதிப்புக்களைக் குறித்தன. இவ்வெண்கள் பத்தை அடியாகக் கொண்ட இடம்சார்ந்த குறியீட்டு முறையில் இருந்தன. ஒரு கிப்பு குறைந்த எண்ணிக்கையான இழைகள் முதல் 2000 இழைகள் வரை கொண்டிருந்தது. தன் வடிவத்தை இழைகளாலான ஈரத்துடைப்பத்தின் வடிவத்துடன் ஒப்பிடுவது உண்டு.

கிப்பு என ஐயத்துக்கு இடமின்றி அடையாளம் காணக்கூடிய பொருட்கள் முதன் முதலாக கிபி முதலாம் ஆயிரவாண்டைச் சேர்ந்த தொல்லியல் பதிவுகளில் காணப்பட்டன. பின்னர் இவை, இன்காக்களின் கட்டுப்பாட்டில் இருந்த தகுவாந்தின்சுயு (Tawantinsuyu), பேரரசின் நிர்வாகத்தில் முக்கிய பங்கு வகித்தன. இப் பேரரசு கி.பி 1450 இற்கும் 1532 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அன்டெசுப் (Andes) பகுதி முழுவதும் சிறப்புற்று விளங்கியது. அப்பகுதி ஸ்பானியப் பேரரசின் ஆக்கிரமிப்புக்கு உள்ளான பின்னர் கிப்புவின் பயன்பாடு படிப்படியாக இல்லாமல் போய் ஐரோப்பிய எழுத்து முறை அதன் இடத்தைப் பிடித்துக் கொண்டது.

(தொடரும்)

Scanned with CamScanner

## உழவு இயந்தி...

சிறுவனின் தந்தை நிலத்தினை உழுவதற்காக, வாடகைக்கு உழவு இயந்திரத்தினை அழைத்துவந்து உழவு வேலையில் ஈடுபடுத்தினார்.

இதன்போது வாடகைக்கு வேலைக்கு அமர்த்தப்பட்ட உழவு இயந்திரத்தின் சாரதி, காணி உரிமையாளரது மகனையும் அவரது உறவினரது மகனையும் உழவு இயந்திரத்தில் ஏற்றி வைத்துக் கொண்டு உழவுப் பணியில் ஈடுபட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த சிறுவன் திடிரென கீழே விழுந்து உழவு இயந்திரத்திற்குள் சிக்குண்டு படுகாயமடைந்துள்ளான்.

எனினும் சிறுவன் உடனடியாக மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் சிறுவன் ஏற்கெனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் பாலமோட்டைப் பகுதியைச் சேர்ந்த கந்ததன் கனிஸன் என்ற 5 வயதுச் சிறுவனே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளான்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-03,104,250,281)

## புலிகளின்...

பகுதியில் இருந்து விடுதலைப் புலிகளின் குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணி ஒன்றில் பகுதியளவில் மண்ணில் புதைந்திருந்த இந்தக் குண்டு மீட்கப்பட்டுள்ளது. குறித்த காணியின் உரிமையாளர் வெளிநாட்டில் வசிப்பதாக தெரியவந்துள்ளது.

அந்தக் குண்டில் "கொல்பவன் வெல்வான், எதிரியின் பக்கம், தயாரிப்பு தமிழீழம்" என்ற வசனங்கள் பொறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,18,33,104)

## 19 பேர்...

முந்துள்ளனர்.

இதன் அடிப்படையில் இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 14 ஆயிரத்து 127ஆக அதிகரித்துள்ளது. (ம-03)

## யாழில்...

பாயின் பிரபல வர்த்தக நிலையம் சுந்தர்சன் இலத்திரனியல் நிறுவனத்தின் ஸ்தாபகர் சிவகுமாரன் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

(ம-03,18)

## மாவீரர் நாள்...

ட்ளது. அந்தவகையில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், முன்னாள் வடக்கு மாகாண சபை அமைச்சர் அனந்தி சசிதரன், வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் மற்றும் வலி. மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் ஜெனராசா ஆகியோருக்கு மல்லாகம் நீதிமன்றத்தினால் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-03,104)

## குடும்பஸ்தர்...

ரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

காரைநகர் - களபூமியைச் சேர்ந்த சிவஞானம் ரவிச்சந்திரன் (வயது - 50) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-03,104)

## பருத்தித்துறை...

பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளினால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்திலும், சுன்னாகம், தெல்லிப்பழை மற்றும் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளினால் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்திலும் கடந்த வெள்ளிக்கிழமை மாவீரர் நாள் நிகழ்வுகளுக்குத் தடைகோரி விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

நவம்பர் 21 ஆம் திகதி தொடக்கம் வரும் நவம்பர் 28 ஆம் திகதி வரை இந்தத் தடை உத்தரவை வழங்குமாறு பொலிஸாரினால் கோரப்பட்டுள்ளது.

குறித்த விண்ணப்பங்கள் மீதான பரிசீலனை இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (ம-03,18,33)

## அரசியல்...

"ஒரே நாடு ஒரே சட்டம்" ஜனாதிபதி செயலணிக்குள் வெளியாகிய நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட "ஒரே நாடு ஒரே சட்டம்" என்ற செயலணியின் கூட்டமானது செயலணித் தலைவர் ஞானசாரதேரர் தலைமையில் வவுனியாவில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் அரசியல் கைதிகளின் விடுதலை, தொல்பொருள் திணைக்களங்களின் நடவடிக்கை, பௌத்த விகாரைகளை அமைப்பது, எமது மத வழிபாடுகள் மறுக்கப்படுவது தொடர்பான பிரச்சினை, மாவீரர் தினம் தொடர்பில் எமது உரிமைகள் மறுக்கப்படுவது தொடர்பான பிரச்சினைகள் பற்றி பேசியிருந்தேன்.

அப்போது அவரிடம் இருந்து வந்த பதிலில் அரசியல் கைதிகள் தொடர்பாக உள்ளே இருப்பவர்கள் தொடர்பில் ஜனாதிபதி சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பேசியுள்ளார்.

மிக விரைவில் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற செய்தி கிடைத்தது. இது தொடர்பில் ஜனாதிபதி தன்னிடமும் தெரிவித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மாவீரர் தினம் தொடர்பில் கேட்டிருந்தேன். பல்வேறு காலங்களிலும் மரணித்த மாவீரர்களை நினைவுகூர உரிமை உள்ளது எனத் தெரிவித்தேன். படுகொலைகள் பல நடந்தன. அதனை நாம் அன்றாடம் நினைவுகூர முடியாது. இதனை ஒரே வாரத்தில் செய்கின்றோம் எனத் தெரிவித்தேன்.

இதன்போது இந்த விடயம் தொடர்பில் தான்முழுமையாகபதில்கூற முடியாது என்று தெரிவித்ததாகக் கூறினார். (ம-03,250)

## விளக்கேற்ற...

போதைப்பொருளால் நாட்டில் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். விளக்கேற்றுவதற்காக கேட்கும் அரசியல்வாதிகள் போதைப்பொருள் தடுப்பு மத்திய நிலையத்தை உருவாக்கத் தயாரில்லை. தமிழர்களது பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் என்ன செய்கிறார்கள் என்று கேள்வி எழுப்பினார்.

தேசவழமைச் சட்டத்தில் உள்ள நல்லதையும் பெற வேண்டும். கண்டியச் சட்டம் முஸ்லிம் சட்டம் ஆகியவற்றில் உள்ள நல்லதையும் பெற்று சிறந்த சட்டத்தை ஏற்படுத்துவோம் எல்லா சட்டங்களிலும் இருக்கின்ற நல்ல விடயங்களைச் சேர்த்து ஒரே சட்டத்தை உருவாக்க வேண்டும்.

கடந்த காலங்களில் நடைபெற்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடக்காமல் இருப்பதற்காக ஒரே நாடு ஒரே சட்டத்தை உருவாக்க வேண்டுமென்றார். (ம-03,18,33,104)

## மோ.சை...

ச்சேரிக்கு முன்பாக நேற்று இரவு 8.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் திருநகர் தெற்கைச் சேர்ந்த சின்னத்துரை ரஞ்சன (வயது -60) என்பவரே மரணமடைந்துள்ளார்.

(ம-03)

## அரசுக்கு...

ளார் எந்தவித அசம்பாவிதமும் நடைபெறாமல் முழுப் பாதுகாப்பு வழங்கினர்.

நுவரெலியா சுதந்திர விவசாயிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த எதிர்ப்பு பேரணியில் எந்தவொரு அரசியல்வாதிகளும் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-03)

## 6 நாட்கள்...

(வயது - 6) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி கடந்த 15 ஆம் திகதி தொடர் காய்ச்சலினால் அவதிப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (ம-03)

## வடமராட்சி...

கண்ணன் காந்தன் (வயது- 22) சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம-03,60)

## பொலிஸ்...

இல்லங்கள், வீதிகள், கோயில்கள் எங்கும் படையினரின் கெடுபிடிகள் அதிகமாகக் காணப்பட்டது.


மேலும் யாழ். பல்கலைக்கழக நுழைவாயில் பகுதிகளிலும் பாதுகாப்புத் தரப்பினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ம-3)




























Scanned with CamScanner

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக் கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். 076 825 7716 (ஆகாஸ்)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975/=Kg

எமது தொடர்புக்கிளைகள்

0768226240 DHL

## ராஜ் நகை மாடம்

[illegible]

தொடர்பு ராஜ் - 077 679 6623

## கணனி திருத்தம்

Iphone, Android Phone களும் திருத்திக் கொடுக்கப்படும்.
உங்கள் கணனிகள், Laptop பழுதடைந்து விட்டதா? உங்கள் வீடுகளுக்கும் அலுவலகங்களுக்கும் வந்து திருத்தித் தருகின்றோம்.
கணனிகள் விற்றல், வாங்குதல், பழைய கணனிகளும் Laptop களும் வாங்கப்படும்.

தொடர்புகளுக்கு
NPO Computer System - 077 243 8537

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தி அருகாமையில் புன்னாலைக்கட்டுவன் வீதியில்
4 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
1½ பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
(சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து 500M தூரம்)

தொடர்பு
077 623 4204
077 288 0152, 076 890 9259
(8728)

IELTS DMI 0777 17 35 17
#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
#Unique Test Tips
#40 hrs with free 4 mock exam
#Latest course Material (Book 16)
Academic or General

IELTS Life Skills - A1
திருமணம் செய்து UK செல்வோருக்கானது
DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகவும்

DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
22/11/2021 Mon 9:30 am

German - Germany, Swiss
French - France நாட்டுக்கு செல்வோருக்கு

DMI COMPUTER EDUCATION
0777 24 07 07

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் 100% பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536

அருள்
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.
தொ.பே:- 076 443 1576
(C-3066)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், மயிலிட்டி, B.C றோட் சாந்த சந்தி அருகாமையில் மெயின் றோட்டுடன்
4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு:
076 755 8606
077 015 0353
(8729)

பௌதிகவியல் (Physics)
2022, 2023 உயர்தர மாணவர்களிற் கான பௌதிகவியல் தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும். (personal and group classes)
076 157 0107
(8692)


## மரண அறிவித்தல்



தோற்றம் 00.04.1948
மறைவு 21.11.2021

# சுந்தரம் சிவகுமாரன்

(சுந்தர்சன் நிறுவன உரிமையாளர்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் சிவகுமாரன் அவர்கள் நேற்று (21.11.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - ராசமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - அபய லட்சுமி தம்பதியினரின் பாசமிகு மருமகனும் கலாதேவியின் அன்புக் கணவரும் பிரதீபன், பிரசாந், [illegible], றொபிக்கா, தாணீதரன் [illegible] (லண்டன்), [illegible] ஆகியோரின் பாசமிகு தந்தையும் [illegible] பிரசாந், நாராயணசிங்கம் தாணீதரன் (லண்டன்), பிரதீபன் [illegible] ஆகியோரின் அன்பு மாமனாரும் [illegible] தேவியின் பாசமிகு சகோதரனும் பிரதீபன் [illegible], பிரதீபன் [illegible], தாணீதரன் [illegible], தாணீதரன் [illegible] ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] வீதி,
மானிப்பாய் [illegible], மானிப்பாய்.
(8730)
தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

# வைத்தி தம்பு

தோற்றம் 25.12.1927
மறைவு 19.11.2021



யாழ். வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தி தம்பு அவர்கள் 19.11.2021 (வெள்ளிக்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் தவமனிதேவி (வவி - பிரான்ஸ்), வினோதாஸ் (மோகன் - பிரான்ஸ், Jewellery mart) மோகனதாஸ் (தாசன் - பிரான்ஸ், Anna Marche), பிறேமதாஸ் (கண்ணன், Raagawa Tailor, பிரான்ஸ்), வினோதரஞ்சினி (மோகனா - இலங்கை), தேவகாருணி (மாலா - பிரான்ஸ்), ரதிவதனா (வதனா - இந்தியா), தவறஞ்சினி (சிவா - இலங்கை), மைதிலி (இலங்கை), காயத்திரி (பிரான்ஸ்), மதிவதனா (அமரர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை, ரத்தினம், சின்னத்துரை, கணேஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பொன்னர் (டென் மார்க்) அவர்களின் அன்புச் சகோதரரும் ஞானதீபன் (பிரான்ஸ்), கமலா (பிரான்ஸ்), ராசன் (இலங்கை), காலஞ்சென்ற சின்னராசா (பிரான்ஸ்), தெமிலா (பிரான்ஸ்), செண்றி (இந்தியா), காலஞ்சென்ற உதயன் (இலங்கை), கர்சினி (பிரான்ஸ்), யூட் (இலங்கை), சிவகுமரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நீகன், ஜனார்த்திக், பிரியந்தி, துவாரகா, பிரசிந்தா, மக்ஸ், வெர்ஜினி, வினிர்சன், பிறின்சி, விதுஷ்னன், இலக்கியா, சாயித்யா, சயன், கர்சித், கெவின் (பிரான்ஸ்), துஷ்யந்தன் (பிரான்ஸ்), துஷானி, அபிஷாந் துசல்யா, மிதுஷாந், நதீஸ், லக்ஷன், தேனுஷன், பிரசாந், டயானா (இலங்கை), கீரா, நிஷா (இந்தியா), வசந், திவ்யன், சுகியான்ஸ், அபிலாஷ், பிறின்ஸ், ஜெனோஷா, ஒலிவியா, லாவண்யா ஆகியோரின் அன்புப் பேரனும் மிலான், லியான், லீமா, லியா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.11.2021) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 10 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொன்னையா வீதி,
ஆனைக்கோட்டை.
வீரு (077 107 4926), லக்ஷன் (075 400 9587), நதீஸ் (077 070 3915)
(8727)
தகவல்
குடும்பத்தினர்